


# உதயன்

...ங்கள் - 24 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

...16 ஆம் நாள் வியாழக்கிழமை 01 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2...


யாழ். போதனாவில் சாதனை !



# போராட்டங்களால் எதுவும் கிட்டாது

## ராஜபக்ச அரசு திமிர்த்தனம்

கொழும்பு, ஒக்ரோபர் 1

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் 'உரிமைகள் வேண்டும்' என்ற கோஷத்துடன் கடந்த காலங்களிலும், தற்காலத்திலும் அறவழிப் போராட்டங்களை நடத்தி என்ன பயனைக் கண்டார்கள்? ஒரு நாள் உணவொறுப்புப் போராட்டமும், ஒரு நாள் முழு அடைப்புப் போராட்டமும்தான் அவர்களின் தற்போதைய அறவழிப் போராட்டங்களா?' இவ்வாறு கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

22 ➤

## துண்டித்த கையை இணைத்த மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1

ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு முன்னெடுக்கப்பட்ட அறுவைச் சிகிச்சைமூலம் அவரது கை காப்பாற்றப் பட்டுள்ளது.

போதனா மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை வல்லுநர் இளஞ்செழியன் பல்லவன் தலைமையிலான மருத்துவக் குழுவினர், முழுமை

22 ➤

## '20'க்கு எதிராக மூவினத்தவர்களும் வீதியில் இறங்குக!



### சஜித் அறைகூவல்

கொழும்பு, ஒக்: 1

'இலங்கையின் ஜனநாயகத்துக்கு உலைவைக்கக் காத்திருக்கின்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்க வேண்டும். நாடளாவிய ரீதியில் இடம்பெ

22 ➤

இன்று சர்வதேச சிறுவர், முதியோர் தினமாகும். இதையொட்டி வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

## இலங்கையில் அதிகளவு மனித உரிமை மீறல்கள்

- ஐ.நா. பொதுச்செயலர் குத்தேரஸ் கவலை
- பதில் வழங்குமாறும் அரசுக்கு அழுத்தம்



கொழும்பு, ஒக். 1

இலங்கையில் அதிகளவு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலர் அன்டனியோ குத்தேரஸ் அதிருப்தி வெளியிட்டார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்றுவரும் 45ஆவது அமர்வில் குத்தேரஸால் சமர்ப்

22 ➤

## 13க்கு எதிராகப் போராடி உயிர் துறக்கவும் தயார்!

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறுவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு எந்த உரிமையும் கிடையாது. 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போராடி உயிர்துறக்கவும் தயார் என்று பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

விரிவு பக். 15 ➤

### முச்சந்தி முரளி




## கொரோனா அச்சுறுத்தல் இலங்கையில் இருக்கிறது

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 1

கொரோனாப் பெருந்தொற்று கணிசமான அளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும், இலங்கை இன்னும்

22 ➤

## ஒக்ரோபர் 9 பள்ளிகளுக்கு விடுமுறை!!

கொழும்பு, ஒக். 1

நாட்டின் அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் இரண்டாவது தவணை விடுமுறை எதிர்வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், மூன்றாம் தவணைக்காக அனைத்துப் பாடசாலைக

22 ➤

## பெண்ணொருவர் வன்புணர்வு: குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடூழியம்

திருகோணமலை, ஒக். 1

பெண்ணொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்காக குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டது திருகோணமலை மேல் நீதிமன்றம்.

22 ➤

மன்னார் முருங்கன் ஆரம்பப் பாடசாலையின்

# அதிபரை நிரந்தரமாக்க வலியுறுத்தி பெற்றோர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு!

**மன்னார், ஒக். 1**
**மன்னார் முருங்கன் ஆரம்ப பாடசாலையின் அதிபரான அருட்சகோதரி ஒருவர் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதை அடுத்து, அவரை அந்தப் பாடசாலைக்கு நிரந்தரமாக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பெற்றோர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

குறித்த அதிபர் நாளைமுதல் வங்காலை பாட சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். எனினும் அவரை தமது பிள்ளைகள் கற்கும் முருங்கன் ஆரம்ப பாடசாலையின் அதிபராக நீடிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் பாட சாலைக்கு முன்பாக நேற்று இந்த ஆர்ப்பாட் டத்தை நடத்தினர்.
முருங்கன் ஆரம்பப் பாடசாலைக்கு என்று நியமிக்கப்படும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரி யர்கள் உடனுக்குடன் இடமாற்றம் செய்யப்படு கின்றனர். தமது கோரிக்கைக்கு நிரந்தரத் தீர்வு தரப்படாவிட்டால் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டோம் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர்.
சம்பவ இடத்திற்கு வருகைதந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் கே.திலீபன் மற்றும் நானாட் டான் பிரதேச சபை உறுப்பினர் றொஜன் ஸ்ராலின் ஆகியோர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருடன் கலந்துரையாடினர்.



(ம-56)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஒக். 1
தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை வெள்ளிக் கிழமை மதியம் ஒரு மணிக்கு கல்லூரி மண்ட பத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரி அதிபர் த.வரதன் தலைமையில் நடைபெற வுள்ள இந்தக் கூட்டத்தில் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அதி பர் கேட்டுள்ளார்.
(த)

# கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்.சேவை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின், யாழ்ப்பாண மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன் கருதி, வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று கோண்டாவில் இந்துக் கல்லூ ரியில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா இந்த நிலையத்தை திறந்துவைத்தார்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாண வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.சதீஸ்குமார், சங்கத்தின் பிரதிச் செயலா ளர், வடக்கு மாகாண பிரதி முகாமையாளர், வடமாகா ணப் பணிப்பாளர், மேம்படுத்தல் உத்தியோகத்தர், வலய முகாமையாளர், உதவிக்கல்விப் பணிப்பா ளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
கல்விக் கூட்டுறவுச் சங்கம், கல்விசார் ஊழியர் களை நலனாகக் கொண்டு செயற்படும் ஓர் அமைப்பு. இந்நிறுவனம் இலங்கை முழுவதும் 2 இலட்சத்துக்கு அதிகமான அங்கத்தவர்களை கொண்டு இயங்குகின்றது.
கல்விசார் ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத் திலான கடன்கள், ஓய்வூதியம், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில், பல்கலைக் கழக புலமைப்பரிசில், ஓய்வு விடுதிகள் என பலத ரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.
(த-26)

## காலபோக விதைப்புகள் ஆரம்பம்: கால்நடைகளை கட்டி வளர்க்குக!

யாழ்ப்பாணம், ஒக். 1
காலபோக விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள காரணத் தால் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அள வெட்டி தெற்கு கமநல அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.
கடந்த 25ஆம் திகதி முதல் அடுத்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை கால்நடைகளை அவற் றின் உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும். நெல் விளைச்சலைப் பெருக்குவதற்காக அனைவ ரும் இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண் டும். மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கால்நடைகள் வயல் நிலங்களில் பிடிக்கப்பட்டால் அல்லது கட்டா மல் திரிந்தால் அவை நெற்செய்கையாளர்களால் பிடிக்கப்படும். அவ்வாறு பிடிக்கப்பட்டால் மாடு ஒன் றுக்கு ஆயிரத்து 600 ரூபாவும் ஆடு ஒன்றுக்கு ஆயிரத்து 100 ரூபாவும் தண்டமாக அறவிடப்படும் என்றும் அளவெட்டி தெற்கு கமநல அமைப்பு அறி வித்துள்ளது.
கால்நடை வளர்ப்போர்கள் மற்றும் நெற்செய்கையா ளர்கள் இடையே ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடல்களுக்கு அமையவே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-இ)

# தகவல் அறியும் சட்டத்தில் தகவல் பெறுவதில் சிரமம்

இதுவரை 571 முறைப்பாடுகள்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் 571 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகு தியில் தகவல் ஆணையகத்திடம் இவை தாக்கல் செய்யப்பட் டுள்ளன. இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என சட்டத்தரணி அஸ்வினி நடேசன் வீரபாகு தெரிவித்துள்ளார். முறைப்பாடுகளில் அதிக மானவை நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை தொடர்பில் கிடைத்துள்ளன. 373 முறைப்பாடுகள் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்கள் தொடர்பானவை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் பதில் வழங்கத் தவ றியமை மற்றும் மறுத்ததன் அடிப்படையில் அவை அமைந் துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற 'தகவல் அறியும் உரிமை சட்டம் சாத னைகள் மற்றும் சவால்கள்' தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரி வித்தார்.
(ம-வஇ)

# தனுஸ்கோடியில் கரையொதுங்கிய இராட்சத உருளையால் பரபரப்பு!

மன்னார், ஒக். 1
தனுஸ்கோடி அருகே அரிச்சல்முனை கடல் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை கரை ஒதுங்கிய இறப்பர் உருளை குறித்து தமிழக கடலோர பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



ராமநாதபுரம் மாவட்டம் தனுஸ்கோடி அருகே மன்னார் வளைகுடா கடல் பகுதி யில் மீன் பிடிக்கச் சென்ற நாட்டுப் படகு மீனவர்கள், அரிச்சல் முனை அருகே இராட்சத இறப்பர் உருளை கரை ஒதுங் கியுள்ளதாக தனுஸ்கோடி தமிழக கடலோர பொலி ஸாருக்குத் தகவல் கொடுத்தனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சோதனை நடத்தினர். பின்னர் அந்த உருளை கரைக்குக் கொண்டுவரப்பட்டது.
சுமார் 15 அடி உயரமும் 6 அடி விட்டமும் கொண்ட இறப்பர் உருளை சுமார் 3 தொன் எடையுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கரை ஒதுங்கிய உருளை கப்பல்களில் மிதவையாகவோ அல்லது துறைமுகங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பல் ஒன்றோடு ஒன்று மோதி சேதமடையாமல் தடுக்கும் உருளையாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
(ம-56)

# 20ஐ நிறைவேற்ற முன்னரே சீரமைப்புகளை புகுத்துங்கள்

*தவறின் ஆபத்து ஏற்படும் என்கின்றனர் மகாசங்கத்தினர்*

**கொழும்பு, ஒக். 1**

**20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர், இந்தத் திருத்தம் தொடர்பாக ஆராய்ந்த குழுவின் மறுசீரமைப்புகளை அதில் உள்ளடக்காவிட்டால் பிரச்சினைக்குரிய சூழல் உருவாகும் அபாயம் உள்ளது என்று மகா சங்கத்தின் அஸ்கிரிய பீடத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.**

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட சிலர் அஸ்கிரிய பீடத்தின் தேரர்களை சந்தித்தபோதே மகா சங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நியாயமான சமூகத்துக்கான தேசிய அமைப்பின் தலைவரான கரு ஜயசூரிய அஸ்கிரிய பீட மகா சங்கத் தேரர்களிடம் ஆசி பெற்றார்.

மல்வத்து மகா சங்கத்தினரையும் சந்தித்து ஆசி பெற்றார். அதன்போதே 20 ஆவது திருத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் மகா சங்கத்தினர் தெரிவித்தனர். (த-இ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் இந்துக்களின் போராட்டத்துக்கு ஆதரவு

வவுனியா, ஒக். 1

ஆறு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து இந்து அமைப்புகளின் ஏற்பாட்டில் வவுனியாவில் இன்று நடைபெறவுள்ள போராட்டத்துக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்கள், "தமிழ் மக்கள் பல்வேறு விதத்திலும் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் இந்து மதத்துக்கும் இழுக்கு ஏற்பட்டுத்தப்படும் சூழலில், குறித்த ஊர்வலத்துக்கு தமிழர்கள் என்ற ரீதியில் நாம் ஒற்றுமையாக அணிதிரளவேண்டும்." என்றுதெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் பேரணி இன்று காலை 8 மணியளவில் வவுனியா குருமன்காடு காளிகோவில் முன்றலில் ஆரம்பமாகி குருமன்காட்டு சந்தி ஊடாக ரயில் நிலைய வீதியை அடைந்து மணிக்கூட்டுகோபுர சந்தியூடாக மருத்துவமனை சுற்றுவட்டத்தைச் சென்றடைந்து அங்கிருந்து வவுனியா கந்தசுவாமி கோவில் முன்றலில் நிறைவடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

# பிரதேச செயலகத்தில் பொலித்தீனுக்கு தடை

*நடைமுறைக்கு வரவுள்ள தீர்மானம்*

உடுவில் பிரதேச செயலக வளாகத்தில் பொலித்தீன் பாவனைக்கு தடை விதிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது

இந்தப் பிரதேச செயலகம் 2018 2019 முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக 2020ஆம் ஆண்டு தேசிய உற்பத்தித் திறன் விருது போட்டிக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் உற்பத்தித்திறன் செயற்பா டுகளை மேம்படுத்தல் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலர் த. முகுந்தன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதன்போதே பிரதேச செயலக வளாகத்தில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதோடு அதனை பாவிப்பதற்கு முற்றாக தடை விதிப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் மூன்று மாதங்களுக்கு பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துதலும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பாவனையை முற்றாக நிறுத்துவதற்கும் ஏதுவாக சகல அலுவலர்களும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பிரதேச செயலர் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-39)

# முதிரைக் குற்றிகளுடன் பாலமோட்டையில் கைது



வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டையில் ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து முதிரை மரக் குற்றிகள் 9 மீட்கப்பட்டன.

பாலமோட்டை பகுதியைச் சேர்ந்த 41வயதுடையவரே கைதுசெய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-18)

## மூத்த பிரஜைகள் தினம்

சிறுப்பிட்டி கிழக்கு ஜே/271 கிராம அலுவலர் பிரிவில் மூத்த பிரஜைகள் தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் சு.கனகராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுப்பிட்டி இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி விஜிதா பிரதீவ் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-11)

# விபத்துகளில் இருவர் காயம்

கிளிநொச்சி, ஒக். 1

கிளிநொச்சி காக்கா கடை சந்தியில் நேற்று மாலை சிங்கள பெண் ஒருவர் செலுத்தி வந்த காரும் மோட்டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்தவர், பலத்த காயமடைந்தார். அவரை சம்பவ இடத்தில் கூடியவர்கள் மீட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்த்தனர். கிளிநொச்சி பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இதேவேளை, கிளிநொச்சி ஏ9 வீதி 55ஆம் கட்டை பகுதியில் நேற்று மாலை 6.30மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சறுக்கி வீழ்ந்து விபத்துக்குள்ளானார். படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த 45 வயதுடையவரே இவ்வாறு படுகாயமடைந்தார். (த-21,ரி1)



வவுனியா கோவில்குளம் ஸ்ரீதேவி பூதேவி சமேத மகாவிஷ்ணு ஆலயத்தின் இரதோற்சவம் மிகவும் சிறப்பாக நேற்று நடைபெற்றது. இதன்போது, அடியார்கள் அங்கபிரதட்சினை , காவடிகள் மற்றும் கற்பூர சட்டிகள் என்பவற்றை ஏந்தி தங்கள் நேர்த்திகடன்களை நிறைவேற்றினர். (110)

**Dr.M.Ganesharatnam Memorial Lecture 2020**

## Why do we fail?

by

**Professor Mohan de Silva**

(MS, FRCS Edin, FCSSL)

Emeritus Professor of Surgery,

University of Sri Jayewardenepura.

Former Chairman, University Grants Commission.

on

Thursday 01st October, 2020 at 4.00 p.m.

at

Hoover Auditorium

Faculty of Medicine

University of Jaffna

All are cordially invited

**Registrar**
**University of Jaffna**
**Sri Lanka.**
**29.09.2020**

மன்னார் மாவட்ட

# திட்டப் பணிப்பாளராக மகேஸ்வரன் நியமனம்



யாழ்ப்பாணம், ஒக். 01

மன்னார் மாவட்ட திட்டப் பணிப்பாளராக க.மகேஸ்வரன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இலங்கை திட்டமிடல் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த க.மகேஸ்வரன் இதுவரை காலமும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும், சமுர்த்தி திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள முன்னாள் ஆணையாளர் ரி.விஸ்வரூபன் திடீரென நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மன்னார் மாவட்ட திட்டப் பணிப்பாளராக க.மகேஸ்வரன் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஒ.5)

# விபூதியை தூவினாராம் சந்தியா எக்னெலிகொட

கொழும்பு, ஒக்.1

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட கொழும்பு மேல் நீதிமன்றத்தின் வாயிலில் விபூதி தூவினார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரகீத் எக்னெலிகொட காணாமல்போன சம்பவம் தொடர்பான வழக்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளுக்கு முன்னர் சந்தியா எக்னெலிகொட, முகத்துவாரம் காளியம்மன் கோயிலுக்கு சென்று தேங்காய் உடைத்து பிரார்த்தனை செய்துள்ளார். அங்கு வழங்கப்பட்ட விபூதியையே அவர் நீதிமன்ற வாயிலில் தூவினார் என்றே சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010ஆம் ஆண்டு கொழும்பு புறநகர் பகுதி ஒன்றில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார். இந்த சம்பவத்துடன் படையினருக்கு தொடர்பு உள்ளது என்று கூறப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் படையினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (எ-இ)

# சந்திமால் ஜயசிங்க உடையால் சர்ச்சை

கொழும்பு, ஒக்.1

இராணுவ சீருடைக்கு நிகரான உடையை அணிந்து பிறந்த நாள் விருந்தொன்றில் கலந்து கொண்ட அழகு கலை நிபுணர் சந்திமால் ஜயசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கோரி, சட்டத்தரணிகள் சிலர் நேற்றுமுன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வைபவத்தின் போது அவர் அணிந்திருந்த இராணுவ இலட்சினையுடன் கூடிய ஆடை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் முறைப்பாட்டில் கூறியுள்ளனர்.

சந்திமால் ஜயசிங்கவின் பிறந்த தின நிகழ்வில் கலைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கொரோனா வைரஸ் பரவும் ஆபத்தை கவனத்தில் கொள்ளாது மாத்திரமல்ல, சமூக இடைவெளியோ அல்லது சுகாதார ஆலோசனைகளோ அதில் பின்பற்றப்படவில்லை என சமூக ஊடகங்களில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை சந்திமால் ஜயசிங்க தனது பிறந்த நாள் சம்பந்தமாக முகநூலில் வெளியிட்டிருந்த ஒளிப்படத்தைத் தற்போது நீக்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (எ-இ)

# ‘20’ ஆவது திருத்த வரைவை ஆதரிக்கவே அழுத்தங்கள்

## கூறுகிறார் ஹக்கீம்



**கொழும்பு, ஒக். 01**

**20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமான விடயமல்ல. இவ்வாறான நியாயமல்லாத விடயத்துக்கு நாங்களும் ஆதரவளிக்க வேண்டுமென்ற அழுத்தம் வந்த வண்ணமேயுள்ளது. – இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

ஜே.எம்.சித்திக் எழுதிய ‘தப்புக் கணக்கு’ சிறுகதை நூல் வெளியீட்டு விழா மடவளை மதீனா மத்திய கல்லூரி அஷ்ரப் மண்டபத்தில் இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று முஸ்லிம் சமூகம் சம்பந்தமான தேவையற்ற தப்பபிப்ரியங்களுக்கு மத்தியில் சரியான புரிந்துணர்வின்மையால் ஏராளமான புரளிகளுக்கு நாங்கள் முகம் கொடுத்து வருகின்றோம். அவை கலவரங்களாக வெடித்து மிகப் பெரிய அனர்த்தங்களை ஏற்படுத்திய சூழலில் வாழ்ந்து வருகின்றோம்.

இந்தப் பின்னணியில் என்னுடைய புத்தகமொன்றை ஆங்கிலத்தில் வெளியிட்டேன். அந்நூலின் ‘முஸ்லிம்கள் தொடர்பான தவறான எண்ணங்களை களைவதற்கான ஒரு முயற்சி’ என்பதுதான் அதன் உப தலைப்பின் உள்ளார்த்தமாகும். அதனடிப்படையில் முஸ்லிம்கள் பற்றிய பிற சமூகத்தவர்களின் தவறான புரிதல்கள் குறித்த கண்ணோட்டத்தை நீக்கி, உண்மையான யதார்த்தபூர்வமான அணுகுமுறையை அந்நூலில் நான் கையாண்டுள்ளேன்.

இந்தக் கருத்தை மேற்கோள் காட்டி பிராந்திய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கி இருக்கின்ற பிரச்சினைகளின் பின்புலத்தை வைத்து என்னால் இயன்றளவில் ஆழமான ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தேன். அதனைத் தமிழிலும், சிங்களத்திலும் விரைவில் வெளியிடவுள்ளேன். முக்கியமாக, சிங்கள சமூகத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட ஓர் ஆய்வு நூல் என்ற வகையில் அதனை சிங்கள மொழி மூலம் வெளியிடுவதற்கான அவசியத்தை என்னிடம் அநேகர் வலியுறுத்தியிருக்கின்றனர்.

அண்மைக் காலமாக நாங்கள் ஒரு பேசு பொருளாக மாறிவருகின்றோம். என்ன செய்யப் போகின்றோம் என்பது தேர்தலில் எனக்கு வாக்களித்தவர்களுக்குக் கூட, புரியாத புதிராகத்தான் இருந்து வருகின்றது.

நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் புதிய ஆட்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை மக்களின் ஆணையைப் பெற்று ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் எவரும் எதிர்பார்க்காத விதத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த ஆசன சமன்பாடு உருவாகியுள்ளது.

இத்தகைய சூழலில் அரசமைப்பையே மாற்றியமைத்து, அதனைத் தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இன்றைய ஆட்சியாளர்களிடம் மேலோங்கியுள்ளது. ‘அரசமைப்பிலுள்ள பிழையான விடயங்களைத் திருத்துவோம்’ எனத் தேர்தல் காலத்தில் பரப்புரை மேடைகளில் முழங்கினார்கள். ஆனால், அவசியமான சரியான சட்டவிதிகளைக் கூட நீக்கிவிட்டு 1978ஆம் ஆண்டின் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசமைப்பைப் போன்றே முழு அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளில் உள்வாங்கப்படும் விதத்திலான சட்ட திருத்தமே தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

இது நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமான விடயமல்ல. இவ்வாறான நியாயமில்லாத விடயத்துக்கு நாங்களும் ஆதரவளிக்க வேண்டுமென்ற அழுத்தம் வந்த வண்ணமேவுள்ளது.

மடவளையில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் உங்களுடைய விருப்பு வாக்குகளை எனக்கு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

உங்களது வாக்குகளை என்ன எதிர்பார்ப்போடு எனக்கு அளித்தீர்களோ அந்த நம்பிக்கை வீண்போகாமல் எதிர்வரும் அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் கரிசனை கொண்டு தற்போது தோன்றியுள்ள நெருக்கடியான கட்டத்தை மிகவும் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நாங்கள் ஆதரவளித்தாலும், ஆதரவளிக்காது விட்டாலும் ஆட்சியாளர்கள் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சாத்தியப்பாடுகள் உள்ளன என்று கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் கட்சிக்குள்ளும், நாடாளுமன்றத்துக்குள்ளும் இருக்கின்ற பலரும் சிறிது அவதிப்படுகின்றார்கள். இவர்களின் இந்த ஆட்சி நீடிக்குமானால் என்ன செய்வதென சங்கடப்பட்டு அவர்கள் ஒருவிதமான தடுமாற்றத்தில் இருக்கின்றனர்.

இதற்கு மத்தியில் நாட்டையும், ஜனநாயகத்தையும், எமது சமூகத்துக்கு இருக்கின்ற நன்மதிப்பையும் பாதுகாத்துக்கொண்டு இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான உபாயத்தை உரிய முறையில் கையாள்வது எப்படி என்பதுதான் இன்று எங்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையாகும். எனவே, அவற்றை இயன்றவரை சாமர்த்தியமாகவும், சாணக்கியமாகவும், அதேவேளையில், தேவை இல்லாத பகையைத் தேடிக்கொள்ளாமலும் புத்திசாலித்தனமாக காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும்’ - என்றார். (ஒ.5.22)

# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மரக்கன்றுகள்

சாவகச்சேரி,ஒக்.1

ஜனாதிபதியின் சௌபாக்கியா வீட்டுத் தோட்டம் அமைக்கும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 20 திகதி மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் அன்றைய தினம் பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடையாளர்களுக்கு நேற்றுமுன்தினம் அனைத்து கமநல சேவைகள் நிலையங்களிலும் பயிற்சிகள் ஆரம்பமாகி நடைபெற்றன

இத் திட்டத்தில் 7 ஆயிரத்து 500 இடங்களில் நாற்று மேடைகள் அமைக்கும் பணிகள் நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்படும் தலா 50 வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு நாற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதைக்கப்படுமா இன்னொரு உண்மையும்?

முக்கியமானவற்றை அலட்சியமாகக் கடந்து போவதும், உப்புச்சப்பற்ற விடயங்களுக்கு அதீத கவனக் குவிவைக் கோருவதும் இன்றைய உலகில் சாதாரணமாகி விட்டது. அப்படிக் கடந்தவாரம் நாமெல்லோருமே கடந்து போன ஒரு விடயம், மன்னார் நானாட்டானில் குவியலாகக் கண்டெடுக்கப்பட்ட பாண்டியர் காலத்து நாணயங்கள். தனியார் ஒருவரின் காணிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நாணயங்கள், பாண்டியர்களின் மீன் இலச்சினையைக் கொண்டவை. பல நூற்றாண்டுகளுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை. அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்வதனூடாக ஆண்ட தமிழினத்தின் இருப்பியல் தொன்மையை விஞ்ஞானபூர்வமாக நிறுவியிருக்கமுடியும். ஆனால் அப்படி ஏதும் நடந்ததாக இதுவரை தகவலில்லை.

இதே நாணயங்கள் சிங்கள இராசதானி ஒன்றுக்குச் சொந்தமானதாக இருந்திருந்தால் இப்படி, மிகச் சாதாரணமாக அந்த விடயத்தைக் கடந்து போயிருக்க முடியுமா? அடுத்தவன் வரலாற்றையே திரித்து, தங்களின் வரலாறாகக் காட்டிக் கொள்ளும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள், தங்களுக்கான இருப்பை உறுதிப்படுத்தும் ஆதாரம் ஒன்று கிடைத்துவிட்டதாக கொண்டாடியிருப்பார்கள். கொழும்பில் இருந்து ஜனாதிபதி தொடக்கம் அதிகாரிகள் வரை நானாட்டானுக்குப் படையெடுத்திருப்பார்கள். சிங்களப் புத்திஜீவிகளெல்லாம் இந்த நாணயங்கள் பற்றி பக்கம் பக்கமாகக் கட்டுரைகள் எழுதியிருப்பார்கள். நாடாளுமன்றம் வரை அவை பேசுபொருளாக மாறியிருக்கும். ஆனால் என்ன செய்வது? அந்த நாணயங்கள் பாழாய்ப்போன தமிழர்களுக்குச் சொந்தமானவை என்பதால் இப்படியான எதுவும் கிட்டவில்லை.

இதுநாள்வரை சோழர்கள் இலங்கையை ஆண்ட வரலாறே அதிகம் பேசப்பட்டளவுக்கு பாண்டியர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளோ பாண்டியர்களும் இலங்கையின் சில பகுதிகளை ஆண்ட கதைகளோ பேசப்படவில்லை. ஆனால் நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டியர் கால நாணயங்களை ஆராய்ந்தால், வரலாற்றில் மறைக்கப்பட்ட அல்லது விடுபட்ட பல உண்மைகள் தெரியவரலாம்.

பாண்டியர்களும் சோழர்களைப்போல, கடல் பாதுகாப்பில் அக்கறை கொண்டிருந்தவர்களே. இதனடிப்படையில் இலங்கையின் சில பகுதிகளைக் கைப்பற்றி தங்கள் கடல் பலத்தை பாண்டியர்கள் தக்கவைத்துக் கொண்டனர். பாண்டிய இளவரசியான அல்லிராணி, நாகநாடு (இப்போதைய நானாட்டான்), மணலூர், மணிப்புரம் என்னும் பகுதிகளைக் கொண்ட இலங்கையின் வடபகுதியையும், கிழக்கின் சில பகுதிகளையும் ஆட்சி செய்துள்ளாள். அதன் பின்னர் சோழ மன்னனின் படையெடுப்பால் சில பகுதிகளை அல்லிராணி இழக்க நேர்ந்தது. எனினும் கடைசிவரை அவளின் ஆட்சி நானாட்டானில் தொடர்ந்தாக வரலாற்றாசிரியர்கள் சொல்வார்கள். நாகநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்கும் 'நாகநாட்டான்' என்பதே மருவி நானாட்டான் என அழைக்கப்படுவதாகவும் ஐதீகம். ஆனால் இவையெல்லாவற்றுக்கும் நானாட்டானில் உள்ள பாண்டியர் கால அரண் ஒன்றும், மன்னார் அரிப்புத்துறையில் உள்ள அல்லிராணிக் கோட்டையுமே சாட்சியாக இருக்கின்றன.

ஆனால் இப்போது மீட்கப்பட்ட பெருந்தொகையான பாண்டியர்கால நாணயங்களையும், அது மீட்கப்பட்ட பகுதியை அகழ்வு செய்தும் ஆய்வுகளை மேற்கொண்டால், பல வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர முடியும். கூடவே இலங்கையில் தமிழர்கள் வந்தேறு குடிகளல்லர், ஆண்டாண்டு காலமாக ஆண்ட பரம்பரையினர் என்ற உண்மையையும் இன்னொருமுறை உரத்துச் சொல்லமுடியும். எனவே இந்த நாணயங்கள் தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுப்பார்கள் என நினைத்து ஏமாறாமல், யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறையினர் களத்தில் இறங்கிக் கருமமாற்ற வேண்டும். செய்வார்களா?

# மாகாணசபை முறைக்கு சமாதி கையெழுத்து வேட்டை ஆரம்பம்

## நிபுணர்குழுவிடமும் மனு கையளிக்க உத்தேசம்

**கொழும்பு, ஒக். 1**

**மாகாணசபை முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் மக்களிடம் கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் சிங்கள தேசியவாத அமைப்புகள் இறங்கியுள்ளன.**

இதற்கான ஆரம்பநிகழ்வு கொழும்பில் நடைபெற்றுள்ளது. இதில் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் சரத்வீரசேகரவும் பங்கேற்றுள்ளார்.

இதன்படி நாடுதழுவிய ரீதியில் மாகாணசபை முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவாக மக்களிடம் கையெழுத்து திரட்டப்படவுள்ளது. மக்களிடம் இவ்வாறு கையெழுத்து திரட்டப்பட்ட பின்னர் அது தொடர்பான மனு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளது.

அதேவேளை, புதிய அரசமைப்புக்கான நகலை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவிடமும் மேற்படி மனு கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5,44)

# மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பு செல்வராசாவிடம்

## தமிழ் அரசுத் தலைவர் மாவை. அதிரடி

மட்டக்களப்பு, ஒக்.1

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு பொறுப்பு அதிகாரியாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் மூத்த துணைத்தலைவருமான பொன்.செல்வராசா நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலாளராக இதுவரை பதவி வகித்து வந்த கி.துரைராசசிங்கம் கிழக்கு விவகாரங்களை கவனித்து வந்தார். இந்த நிலையில் துரைராசசிங்கம் கட்சியின் பொதுச்செயலர் பதவியிலிருந்தும் விலகிய நிலையில், கிழக்கு கட்டமைப்பை மீளுருவாக்க கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அதிரடி நடவடிக்கையெடுத்துள்ளார்.

சில தினங்களின் முன்னர் பொ.செல்வராசாவுக்கு, மாவை சேனாதிராசா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், கட்சி யாப்பின் 13(அ)வின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினடிப்படையில் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு பொறுப்பு அதிகாரியாக உங்களை நியமிக்கிறேன். அம்பாறை விடயங்களையும் உங்களுடன் கலந்துரையாடி மேற்கொள்ளும்படி பணித்துள்ளேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# ஏ.எல். அனுமதி அட்டை அஞ்சலில்!

கொழும்பு, ஒக்.1

இம்முறை உயர்தரப் பரீட்சையில் தோற்றும் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகளுக்கான நுழைவு அனுமதிப்பத்திரங்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் சனத் பூஜித அறிவித்துள்ளார்.

நுழைவு அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காத பரீட்சார்த்திகள் 0112784537 அல்லது 1911 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விசாரிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் 3 லட்சத்து 62 ஆயிரத்து 824 பேர் தோற்றவுள்ளனர். இவர்களில் இரண்டு லட்சத்து 77 ஆயிரத்து 80 பேர் பாடசாலை ஊடாக பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர்.

உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் நவம்பர் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. 2 ஆயிரத்து 648 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ஒ.இ)

# நிலையான அபிவிருத்தியே எதிர்காலத்தில் அவசியமானது

## வன்னி மாவட்ட எம்.பி காதர் மஸ்தான் தெரிவிப்பு

மன்னார், ஒக்.1

எமது மக்களின் எதிர்கால பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையில் நாங்கள் திட்டங்களை வகுத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னாரைப் பொறுத்த வரையில் வடிகாலமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதனால் முழுமையான பயனை அடைந்துள்ளோமா என்பது தெரியாது. சாதாரண மழை பெய்தால் கூட மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அபிவிருத்தி திட்டங்களை சரியான முறையில் அடையாளம் காணக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இக்கூட்டத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என்றார். இக் கூட்டத்தில், வீதி, குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, மீன்பிடி, விவசாயம் உள்ளிட்ட துறைகள் தொடர்பாக ஆராயப்பட்டதோடு, கிடப்பில் உள்ள மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கு வழங்கப்படாத நிதியை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்றமை தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. (ந-213,56)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் காயம்

சாவகச்சேரி, ஒக்.1

மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த 16 வயதுச் சிறுவன் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் மெய்கண்டான் வீதிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

வீதியின் எதிரே வந்த டிப்பர் வாகனத்துக்கு வழிவிட மோட்டார் சைக்கிளை திருப்பிய போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

# மாணவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.1

**பாடசாலைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என்று மாணவர்கள் விடுத்த கோரிக்கையை, அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான அக்கறையுடன் எம்மால் நிறைவேற்ற முடிந்துள்ளது.**

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கல்விச் செல்வமே அழியாததும் பிறர் கொள்ளை கொண்டு போக முடியாதது மாகும். கல்வியை வழங்கும் ஒவ்வொரு நிறுவனமும் நாட்டிற்குரிய நற்பிரஜைகளை உருவாக்கும் உன்னத சேவையை ஆற்றுகின்றன. 30 ஆண்டு காலப் போரை நிறைவுசெய்து நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பி நாட்டின் அபிவிருத்தியை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். போரின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்ப வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல திட்டங்களை எமது அரசு அன்று கொண்டு வந்தது. இன்று மக்கள் மீண்டும் எம்மை ஆட்சிக்கு கொண்டுவந்துள்ளனர்.

எதிர்காலத்தின் தலைவர்களாக விளங்கும் நீங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். என்றார்.

தொடர்ந்து தமிழில் உரையாற்றி பிரதமர், என் அன்பார்ந்த மாணவர்களே, நீங்கள் தான் எமது நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். உங்கள் அனைவரையும் இன்று நான் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமைய பிரார்த்திக்கிறேன்- என்றார். (எ-இ)

# ரயிலில் தவறி வீழ்ந்து ஒருவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.1

ரயில் நிறுத்த முன்னர் அதிலிருந்து இறங்கியவர் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சாவகச்சேரி ரயில் நிலையத்தில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலில் பயணித்த புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த 40 வயது நபரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

# சமுர்த்தி வங்கியில் பெற்ற கடன்களை மீளச் செலுத்தவும்

சாவகச்சேரி,ஒக்.1

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளில் கடன் பெற்ற பயனாளிகள் தவணைப் பணத்தை மீளச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம், கொரோனா தொற்று ஏற்பட்டதால் பயனாளிகள் பெற்ற கடனை மீளப்பெறுதல் மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் ஆறு மாதங்கள் மீளச் செலுத்த தவணை வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட சலுகைக் காலம் செப்ரெம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதால் கடன் தொகையை சலுகைக் கால வட்டியுடன் மீளச் செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகள் பெற்ற கடனை மீளச் செலுத்துவது தொடர்பாக சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தவணைக் கட்டணம் மீளச் செலுத்துவது தொடர்பாக கடன் பெற்றவர்களிடம் குழப்ப நிலை காணப்படுகிறது அரசால் அறிவிக்கப்பட் ஆறு மாத சலு கைக் காலம் மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரை ஆகும்.

இருப்பினும் இக் காலப்.பகுதிக்குள் பயனாளியின் கடன் கணக்கில் மிகுதியாக உள்ள தொகைக்கு வட்டி நான்கு வீதம் குறைக்கப்பட்டு அறவிடுமாறும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சலுகைக் காலம் முடிந்ததும் வழமை போல 12 வீத வட்டியுடன் தவணைக் கட்டணம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர். (ஐ-9)

# பாலியல் லஞ்சம் கோரிய கிராம அலுவலர் கைது

மன்னார், ஒக்.1

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெண் ஒருவரிடம் ஆவ ணம் வழங்குவதற்கு பாலியல் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் கிராம அலுவலர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சிலாபத்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

'ஆவணம் ஒன்றை கிராம அலுவலரிடம் கோரியிருந்தேன். பிரதேச செயலகத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்ப தால் தான் வீட்டிலேயே ஆவணத்தைக் கொண்டுவந்து தருவதாக தெரிவித்ததுடன் அவ் ஆவணத்துடன் முத்தம் ஒன்றும் தருவதாகவும் தெரிவித்தாக. பொலிஸ் முறைப்பாட்டில் பெண் தெரிவித்துள்ளார். முசலிப் பொலிஸார் பெண்ணின் முறைப்பாட்டுக்கு அமைவாக கிராம அலுவலரைக் கைதுசெய்துள்ளனர். (ஒ.5.56)



# வவுனியா நகரம் முழுதும் பறக்கும் நந்திக்கொடிகள்

வவுனியா,ஒக்.1

வவுனியா நகரம் முழுவதும் இந்து மதத்தை பிரதிநிதி த்துவப் படுத்தும் நந்திக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

இந்துக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இன்று வவுனியாவில் மாபெரும் பேரணி நடைபெறவுள்ளது.

இதனையடுத்தே இந்த நந்திக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (ஐ-18)

# புதுப்பிக்கப்பட்ட 10 பஸ்கள் மக்கள் பாவனைக்கு

கொழும்பு, ஒக்.1

மில்லியன் ரூபா பெறுமதியான 9 அரச பஸ்களும், அவசர சேவை பஸ்ஸொன்றும் போக்குவரத்து அமைச்சால் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு சொந்தமான லக்திவ பொறியியலாளர் நிறுவனத்தால் இந்த பஸ்கள் புதுப்பிக்கப்பட்டன.

பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் நேற்றுமுன்தினம் லக்திவ பொறியியலாளர் நிறுவனத்தில் நடைபெற்றது.

இந்த பஸ்கள் நித்தவிரெட்டிய, மாத்தறை, பாணந்துறை, கிரிந்திவெள, அமுத்கம, கெஸ்பேவ, எல்பிட்டிய மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேசங்களில் சேவையில் ஈடுபடவுள்ளன. (ஐ-இ)

## நாட்டில் இடம்பெறும்

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஆய்வுகள்

கொழும்பு,ஒக்.1

துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலையைக் கொண்ட சிறுவர்கள் உள்ள வீடுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகக்கூடிய வீடுகள் மற்றும் இடங்களை வரைபடத்துக்கு உட்படுத்துவதே இதன் நோக்கம் என்று சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி, ஆரம்ப பாடசாலை மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி ஜயசேகர தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்துக்கு அருகாமையில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பிலும் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. (ஐ-இ)

# வீதி விபத்தில் தந்தையும் மகளும் காயம்

சாவகச்சேரி,ஒக்.1

குறுக்கே வந்த நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த தந்தையும் 6 வயது மகளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றது.

பாடசாலைக்கு மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தபோது இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

### இந்த வருடம் பயிற்சிக்காக

# ஆசிரிய கலாசாலைக்கு 183 ஆசிரியர்கள் அனுமதி

**அச்சுவேலி,ஒக் .1**

**கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இந்த வருடம் 183 ஆசிரியர்கள் இரண்டு வருட ஆசிரிய பயிற்சிக்காக அனுமதிக்கப்படவுள்ளனர்.**

இவர்களுக்கான அனுமதிகள் தொடர்பான பதிவுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுவதுடன், அன்று தொடக்கம் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன. முதல் ஐந்து தினங்களும் ஆசிரியர் பயிற்சி தொடர்பான திசைமுகப்படுதல் பயிற்சிகள் நடைபெறும் என்று ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணைலிங்கம் அறிவித்துள்ளார்.

ஆசிரிய கலாசாலையில் இந்த வருடம் பயிற்சிக்காக அனுமதிக்கப்படும் ஆசிரியர்களின் பயிற்சி நெறிகள் தொடர்பான விவரம் வருமாறு:

ஆரம்பக்கல்வி பயிற்சி நெறியில் 135 ஆசிரியர்களும், தமிழ்மொழி பயிற்சிநெறியில் 12 ஆசிரியர்களும், இந்து சமயம் பாடநெறியில் 10 ஆசிரியர்களும், கணித பாடநெறியில் 7 ஆசிரியர்களும், சங்கீத பாடநெறியில் 7 ஆசிரியர்களும், வர்த்தகம் பாடநெறியில் 5 ஆசிரியர்களும், ஆங்கிலம் பாடநெறியில் 5 ஆசிரியர்களும், மனைப் பொருளியல் பாட நெறியில் 2 ஆசிரியர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

# கைதடி அரச இல்லத்தின் முதியோர் வாரம் ஆரம்பம்

### இன்று முதல் புதன்கிழமை வரை நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஒக்.1

கைதடி அரச முதியோர் இல்லத்தின், சர்வதேச முதியோர் வார நிகழ்வு கள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஏழாம் திகதி வரை முதியோர் இல்ல திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன. "இல்லறத்தின் சிறப்பு முதியோரின் இருப்பு" என்னும் தொனிப் பொருளில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்வுக்கு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன், வடக்கு மாகாண நிதி அலகின் பிரதிப் பிரதம செயலாளர் பணியக பிரதம கணக்காளர் பி.ஜெயராஜ், வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.ஸ்ரீனிவாசன், கைதடி முதியோர் இல்ல ஓய்வுநிலை அத்தியட்சகர் கே.வி.சிவனேசன், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ.ம-9)



# துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

துணுக்காய்,ஒக்.1

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் குலசிங்கம் திலீபன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. குறிப்பாக மணல் மற்றும் கிரவல் அகழ்வு தொடர்பான கனியவளங்கள் பிரச்சி னைகள், அரச காணி, வீதி சீரமைப்பு, மேய்ச்சல் தரை, சுகாதார வசதிகள், நீர்ப்பாசனம், விவசாயம் குறிப்பாக நெல் உலரவிடும் தளம் முதலிய பல்வேறுபட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டன.

மேலும் இக் கூட்டத்தில் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் எனப் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

(ஐ-222)

# பசுவதையை தடைசெய்ய ஆதரவு கோரும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.1

இலங்கையில் பசுவதையைத் தடைசெய்து தெய்வீகப் பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கு முழு ஆதரவு நல்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினராக பிரதமரின் இந்துசமய இணைப்பாளர் பிரம்மஸ்ரீ.ராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# மக்கள் இதுவரை அனுபவித்த உரிமைகளை பெட்டிக்குள் அடைத்த அதிகார ஆணியே '20'

### உயர்நீதிமன்றில் மனுக்கள் மீதான விசாரணையில் சட்டத்தரணி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 1

மக்கள் இதுவரை காலம் அனுபவித்து வந்த உரிமைகளை ஒரு பெட்டிக்குள் அடைத்து இறுக்கப்பட்ட அதிகார ஆணியாகவே 20 ஆவது அரசமைப்பு திருத்த சட்ட வரைவை கருத முடியும் என்று உயர்நீதிமன்றில் சட்டத்தரணி கிரிஷ்மால் வர்ணசூரிய சுட்டிக்காட்டினார்.

20 ஆவது அரசமைப்பு வரைவு இலங்கைக் குடியரசின் அரச நிர்வாக கட்டமைப்பை மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், அத்தகைய திட்டத்தை மாற்றுவதற்கு முன்னதாக அதனை மக்களிடம் சமர்ப்பித்து அவர்கள் அதுகுறித்து ஆராய்வதற்கு போதுமானளவு கால அவகாசத்தை வழங்கியதன் பின்னர் மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணி வாதங்களை முன்வைத்தார்.

20ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள மனுக்கள் உயர் நீதிமன்றில் இரண்டாவது நாளாக நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கலாநிதி அஜந்தா பெரேரா உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர்கள் நால்வர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தபோதே சட்டத்தரணி கிரிஷ்மால் வர்ணசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அநேகமான சரத்துக்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்துள்ளன என்று மனுதாரர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் நீதியரசர்கள் குழாமின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் மாத்திரம் நிறைவேற்றுவது போதுமானதாக அமையாது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த திருத்தத்தை மக்கள் கருத்து கணிப்பின் மூலமும் நிறைவேற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தின் சபாநாயகருக்கு உத்தரவிடுமாறும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஊடகங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான சரத்துகள் திருத்தம் இன்றி நிறைவேற்றப்பட்டால் அரச நிர்வாகத்துக்கு உட்பட்ட ஊடக நிறுவனங்கள் மாத்திரம் அல்லாது தனியார் ஊடக நிறுவனங்களும் அரசின் பிடிக்குள் சிக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக இலங்கை பத்திரிகை நிறுவனம் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி லக்ஷமன் ஜெயக்குமார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

தமது நிலைப்பாட்டுக்குக் கட்டுப்படாமல் சுயாதீனமாக செயற்படுகின்ற தனியார் ஊடக நிறுவனங்களுக்கு அழுத்தங்களை பிரயோகித்து அவற்றை தமது நிலைப்பாட்டுக்குள் கொண்டுவரும் அதிகாரமும் உத்தேச அரசமைப்பு திருத்தத்தின் மூலம் அரச நிர்வாகிகளுக்கு கிடைப்பதாகவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் உறுதி செய்யப்பட்ட தகவல் அறியும் சட்டத்துக்கு அமைவான உரிமையை மக்களிடமிருந்து பறித்து மக்களின் வாயை அடைப்பதற்கு 20 ஆவது திருத்தத்தில் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி லக்ஷமன் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் உயர் நீதின்றத்தில் வாதங்களை முன்வைத்தார்.

நாட்டின் ஜனாதிபதி மாத்திரமல்லாது பாராளுமன்றமும் மக்களின் வாக்குரிமை மூலம் கிடைத்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதால், அந்த அதிகாரத்தை கவனமாக செயற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

19 ஆவது அரசமைப்பு மூலம் கிடைத்த தகவல் அறியும் உரிமையை மக்களிடமிருந்து பறிப்பதற்கு அரசு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன சார்பில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரோலன் பெரேரா தெரிவித்துள்ளார். நாடாமன்றுக்கும் நாட்டின் பிரதமருக்கும் உள்ள அதிகாரங்களை 20 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி வசமாக்குவதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதம நீதியரசர் தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள்இ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உள்ளிட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் மாத்திரமல்லாது சட்ட மா அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை தமது விருப்பத்துக்கு ஏற்ப நியமிப்பதற்கான முழுமையான சந்தர்ப்பம் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்றமை பாதகமான விடயம் எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை இந்தளவு அவசரமாக நிறைவேற்றுவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி சந்தேகத்துக்கு வித்திடுவதாகவும் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்துவதாகவும் ரோலன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தின் குழுநிலை சந்தர்ப்பங்களின்போது முன்வைக்கப்படவுள்ள திருத்தங்களாக சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்த ஆவணம் தொடர்பாக இந்த மனுக்கள் மீதான விசாரணையின் போது கவனத்திற்கொள்ள முடியாது எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். (த-இ)

# 13க்கு பாதகம் நேராது

## பொதுஜன பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஒக்.1

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது. மாகாண சபைகளில் காணப்படும் குறைகள் திருத்தப்பட்டு அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்தும் சாத்தியங்கள் உள்ளன.**

இவ்வாறு பொதுஜன பெரமுன வின் மாகாண சபை ஒன்றியத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக் ஷ, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கும், பொதுஜன பெரமுனவின் மாகாண சபை ஒன்றியத்துக்கும் இடையே கடந்தவாரம் சந்திப்பொன்று நடந்துள்ளது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசியல் தேவைகளையும், ஒரு சில மாகாண சபைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் கொண்டு மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய முடியாது.

இந்திய பிரதமரும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கடந்த வாரம் இணைய வழிக் கலந்துரையாடலில் பங்குப்பற்றினார்கள். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சில மாகாண சபைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் வடக்கு மாகாண அபிவிருத்திக்காக மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதி மீள மத்திய அரசிடமே கையளிக்கப்பட்டுள்ளது. ஒரு சில மாகாண சபைகள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டன.

மாகாண சபை தேர்தல் உரிய காலத்தில் நடந்திருந்தால் மாகாண சபை முறைமை, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஆகியவை தொடர்பில் தேவையற்ற விமர்சனங்கள் எழுந்திருக்கா.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும், மாகாண சபை முறைமைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அடுத்த ஆண்டின் முதலாம் காலாண்டில் மாகாண சபை தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியம் உள்ளது - என்றார். (ஏ-இ)

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி இரு வாரங்களில் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.1

இம்முறை பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களுக்கான வெட்டுப் புள்ளி இரு வாரங்களுக் குள் அறிவிக்கப்படும் என்று பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெட்டுப்புள்ளி வெளியிடுவதற்கு முன்னர் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுடன் அது தொடர்பிலான கலந்துரையாடல் நடத்தப்படும். பல்கலைக்கழக உள்ளீர்ப்புக்கான 36 தேர்வுகளின் பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் இம்முறை சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 10 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் - என்றார். (ஐ-இ)

## ராஜித சேனாரத்னவுக்கு மீண்டும் அழைப்பாணை

கொழும்பு,ஒக்.1



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை எதிர்வரும் 5 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவு கொமாண்டர் சுமித் ரணசிங்க ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைவாக இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி, தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அரசியல் அழுத்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாக கொமாண்டர் சுமித் ரணசிங்க தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக ராஜித சேனாரத்ன உள்ளிட்டதரப்பினர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள நிலையில், ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவில் முன்னிலையாகாதகாரணத்தால் அவருக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீள இயங்குகிறது பொலிஸ் கிளியரன்ஸ் அலுவலகம்

கொழும்பு,ஒக்.1

பொலிஸ் அனுமதி அறிக்கைவிண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான அலுவலகம் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொழும்பு ஒல்கோட் மாவத்தையில் உள்ள கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலக கட்டடத்தில் உள்ள பொலிஸ் அனுமதிச் சான்றிதழ் விண்ணப்ப அலுவலகமே மீண்டும் திறக்கப்பட் டது.

கோரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் 31 ஆம் திகதி முதல் இந்த அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

அன்றிலிருந்து பொலிஸ் அனுமதி அறிக்கைகளைப் பெறுவதற்கான விண்ணப்ப ங்கள் இணையத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இருப்பினும், இணையத்தில் (ஒன்லைன்) விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த அலுவலகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

## சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பில் புதிய சட்டம்

### வசந்த யாப்பா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.1

சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் கட்டடங்களை அமைப்பவர்கள் வெறுமனே தண்டம் மாத்திரம் செலுத்தி தப்பிப்பதாகவும், இனிமேல் அவ்வாறு தப்பிக்க முடியாதளவுக்கு சட்டம் இயற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி, பூவெலிக்கட பகுதியின் சங்கமித்த வீதியில் இருந்த 5 மாடிக் கட்டடம் ஒன்று கடந்த 20 ஆம் திகதி அதிகாலை வீடொன்றின் மீது இடிந்து வீழ்ந்தது. இந்த சம்பவத்தில் ஒன்றரை மாத குழந்தை மற்றும் குழந்தையின் தாய், தந்தை ஆகியோர் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-இ)

## போலி நாணய தாள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஒக்.1

போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் உடுதும்பர நிஷாருவ பிரதேசத்தில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுதும்பர பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 39 ஐந்தாயிரம் ரூபா தாள்கள் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)

### இலங்கை தபால் சேவை

## தேசிய பொருளாதாரத்தில் பிரதான பங்குதாரராக இலகுவாக மாற முடியும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.1

இலங்கை தபால் சேவை தனது சேவையின் நோக்கத்தை இனங்கண்டு கொண்டால் தேசிய பொருளாதாரத்தில் பிரதான பங்குதாரராக மாற முடியும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை தபால் சேவைக்கு சொந்தமாக உள்ள பெருமளவு வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் இலக்குகளை இலகுவாக அடைந்துகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தபால் சேவையாளர்கள் மற்றும் வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வருடாந்தம் தபால் திணைக்களம் 8 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக வருமானத்தை ஈட்டுகின்றது. செலவுகள் 14 பில்லியன் ரூபாவாகும். சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளிட்ட ஏனைய செலவுகள் காரணமாக வருடாந்தம் 6 பில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

புதிய சேவைகளை இனங்கண்டு உயர் தொழிநுட்ப முறைமைகளை பயன்படுத்தி தபால் சேவையை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்கு உள்ள வாய்ப்புகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ஐ-இ)

# தமிழர் அரசியல் பண்பாட்டுக்கு தடை விதிப்பது உரிமை மீறலே!

## அபிவிருத்தி மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைப்பு ஐ.நாவில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.1**

**தமிழர்கள் தங்களது அரசியல் பண்பாட்டு உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அரசு தடை விதிப்பது மனித உரிமை மீறல். அதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவ வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அபிவிருத்தி மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைப்பின் பிரதிநிதி கெவின் கணபதிப்பிள்ளை.**

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத்தொடர் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி தற்போது ஜெனீவாவில் நடைபெற்றுவருகின்றது. அதன் இரண்டாவது வாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில், அனைத்து மனித உரிமைகள் உட்பட சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான பொது விவாதம் நடைபெற்றது.

அதில் உரையாற்றியபோதே கெவின் கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத் தமிழர்கள் தங்களது அரசியல் பண்பாட்டு உரிமைகளை நிலைநிறுத்த அரசு தடைவிதிப்பது மனித உரிமை மீறல் என்பதை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களாட்சி நடைமுறைகள் இடம்பெறவில்லை.

இலங்கை பொதுத்தேர்தலில் போட்டியிட்ட கிழக்கு, வடக்கு கிழக்கு மாகாண வேட்பாளர்களை இராணுவமும் பொலிஸாரும் அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றிற்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மனித உரிமைகள் சபை இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவவேண்டும். என்றார்.

(எ-இ)

## ஜி.பி.எஸ். வரிச்சலுகை இலங்கைக்கு

கொழும்பு, ஒக்.1

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.பி.எஸ். வரிச்சலுகை இன்னும் 3 ஆண்டுகளுக்கு இலங்கைக்குக் கிடைக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த வரிச் சலுகை குறைந்த, நடுத்தர வருமானம் உள்ள நாடுகளுக்கே வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு இலங்கையின் தனிநபர் வருமானம் 4 ஆயிரம் அமெரிக்க டொலரைத் தாண்டி, நடுத்தர வருமான நாடாக மாறியிருந்தது. இந்த ஆண்டு இலங்கை மீண்டும் கீழ் நிலைக்குச் சென்றுள்ளது. அதையடுத்து எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு இந்த வரிச் சலுகை இலங்கைக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## மனைவியின் ஆசையால் கஞ்சா கடத்திய ஆசிரியர்!

கொழும்பு, ஒக்.1



போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் தனியார் வகுப்பு ஆசியர் உட்பட 3 பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். 152 கிராம் ஹெரோய்ன் மற்றும் 5 கிலோ கேரளக் கஞ்சா என்பவற்றை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றபோது இவர்கள் கைது செய்ப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் மட்டக்குளியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தனியார் வகுப்பு ஆசிரியர் என்றும் இன்னொருவர் அந்த ஆசிரியரிடம் கற்கும் மாணவர் என்றும் தெரிவித்தனர்.

மனைவிக்கு நவீன ரக வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மாணவர்களைப் பயன்படுத்தி ஆசிரியர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## அரசின் மெத்தனமே அழிவுக்கு காரணம்!

### விஜேதாச குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.1

ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற இஸ்லாமிய அரசு அமைப்புடன் இலங்கையர்கள் கொண்டுள்ள தொடர்புகள் தொடர்பாக நாம் முன்னரே நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பித்தபோதும், அரசு உரிய கவனம் செலுத்தவில்லை. அரசு கவனம் செலுத்தியிருந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுத்திருக்கலாம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அந்த அறிக்கையை சமர்ப்பித்தபோது முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் கேள்விக்கு உட்படுத்தினர் என்றும் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

## வடக்கு, கிழக்கைக் காட்டி தெற்கை ஏமாற்றும் அரசு!

### சபா குகதாஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.1

வடக்கு, கிழக்கைக் காட்டி அரசு தென்னிலங்கையை ஏமாற்றுகின்றது என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசாங்கம் வடகிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் மீது அடக்குமுறைகளை, அச்சுறுத்தல்களை நீதித்துறை மூலமும் இராணுவ இயந்திரத்தின் மூலமும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இது வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை அரசு அரசியல் ரீதியாகவே கையாள வேண்டும். மாறாக வடக்கை அச்சுறுத்தி வைத்திருத்தல் நாட்டுக்குப் பின்னடைவை இராஜதந்திர ரீதியாக உருவாக்கும்.

வடக்கு, கிழக்கில் சண்டித்தன அரசியலை முன்னெடுத்து தென்னிலங்கையில் இனவாதிகளை வைத்து முரண்பாடான ஊடக அறிக்கைகளை நாளாந்தம் வெளியிட்டு வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு ஒரு கருத்தும் , தென்னிலங்கை மக்களுக்கு பிறிதொரு கருத்தையும் கூறி ஏமாற்றுகின்றனர். அரசின் இந்த நிலைப்பாடு ஆரோக்கியமானது அல்ல.-என்றுள்ளது. (எ-இ)

## பொலிஸாரின் அலட்சியம் சஹ்ரானுக்கு சாதகமானது

### பூஜித் வாக்குமூலம்

கொழும்பு, ஒக்.1

பொலிஸாரின் அலட்சியமே சஹ்ரான் ஹாஷிம் மற்றும் அவரது குழுவினர் சுதந்திரமாக உலாவுவதற்கு வழி வகுத்தது என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று முன்தினம் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2017ஆம் ஆண்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஆர்மி மொஹிதீனை கைதுசெய்யாமைக்கு தேசிய உளவுச் சேவை மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியன இரண்டும் சமமாகப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

தேசிய உளவுச் சேவை தனக்கு தேவையான ஒத்துழைப்புக்களை இந்த விடயத்தில் வழங்கவில்லை. அந்த உளவுச் சேவை எனது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை.-என்றார். (எ-இ)

## விடுதிகள் சுற்றிவளைப்பு; 8 பெண்கள் கைது

கொழும்பு, ஒக்.1



தங்காலை பிரதேசத்தில் நடத்திச் செல்லப்பட்ட இரண்டு விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த 8 பெண்கள் மற்றும் அதன் முகாமையாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 30 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்ட பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-இ)

# சிறுவர் தினத்தில் நீதி கோரி பேரணி!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

**சர்வதேச சிறுவர் தினத்தில் தமிழர் தாயத்தில் நீதி கோரி பெரும் எழுச்சிப் பேரணி இன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது என்றும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனு ஒன்று கையளிக்கப்படவுள்ளது என்றும் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

யாழ். ஊடக மன்றத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இன்று முதலாம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி, பேரணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தின் முன்பாக நிறைவு பெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண்டியும், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பவற்றைக் கண்டித்தும் இந்தப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. அதேவேளை, உள்ளக விசாரணையை நிராகரிக்கின்றோம். சர்வதேச விசாரணை சர்வதேச குற்றவியல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு தமக்கான ஆதரவை வழங்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-106)

## சர்வதேச குழந்தைகள் தினத்தில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஏற்பாடு

கிளிநொச்சி, ஒக்.1

சர்வதேச குழந்தைகள் தினமான நவம்பர் 20ஆம் திகதி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்யவுள்ளோம். போர் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகளுடன் சென்ற அவர்களது பச்சிளம் குழந்தைகளில் நூற்றுக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் குழுந்தைகளின் தினத்தைக் கடைப்பிடிக்க நாம் தயாரில்லை.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பால் நேற்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அமைப்பின் வடக்கு மாகாணத்துக்கான திட்டப் பணிப்பாளர் சிவகுமார் விதுரா தெரிவித்ததாவது

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் நீதி கிடைக்கவில்லை. அதனாலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதியைக் கோரியுள்ளோம். அதனூடாகவேனும் எமக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத் தர வேண்டும்- என்றார்.

அந்த அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பி.கருணாவதி தெரிவித்ததாவது:

இன்று முதலாம் திகதி இலங்கையில் குழந்தைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்தத் தினத்தை எமது அமைப்புக் கடைப்பிடிக்க தயார் இல்லை. எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி சர்வதேசக் குழந்தைகள் தினத்தையே கடைப்பிடிக்கவுள்ளோம்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்கள அரச படைகளாலும், துணை இராணுவ குழுக்களாலும் கடத்தப்படும், கொடூரமாக சுட்டு கொலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதி விசாரணையை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் எமது அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போர் நடந்த காலப்பகுதியில் தமிழர் நிலப்பரப்பில் கிளைமோர்த் தாக்குதல்கள் மூலம் பெருமளவு பாடசாலை மாணவர்கள் படு கொலை செய்யப்பட்டனர். செஞ்சோலை சிறார் இல்லம், மருத்துவமனைகள் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்த சிறுவர்கள், பொது மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களிலும், தரை மற்றும் கடல் வழித் தாக்குதல்களிலும் பெருமளவான சிறார்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியைப் பெற சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை துரிதமாக வலியுறுத்தும் வகையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (எ-6)

## விழுது நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், ஒக்.1

விழுது நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. ஆஸ்திரேலியா அரசாங்கத்தின் அனுசரணை மற்றும் ஐ.நா. பெண்களின் பங்குபற்றலுடன் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் கொரோனா நிவர்ரண உதவியாக எழுபது லட்சம் பெறுமதியான உலர் உணவு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளடங்கிய பொதிகள் 1,306 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

செயற்றிட்ட உத்தியோகத்தர் கந்தசாமி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வை விழுது நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மைத்திரேயி ராஜசிங்கம் ஆரம்பித்துவைத்தார். (ந)






## சர்வதேச நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, ஒக்.1

'எமக்கான நீதியை நாம் பெற ஏதுவாக இலங்கையை சர்வதேச நீதிமன்றிற்கு பாரப்படுத்து' எனும் கோரிக்கையுடன் வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் கவனவீர்ப்பு போராட்டம் நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்றது.

இன்றையதினம் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், காணாமல் போன தமது குழந்தைகளுக்கு நீதி கோரி குறித்த கவனவீர்ப்பு போராட்டம் வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக இடம் பெற்றிருந்தது.

தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?, எங்கள் உறவுக்காக நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்பட வேண்டும், இலங்கையில் போர்க்குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துங்கள், சின்னஞ் சிறு சிறார்கள் என்ன ஆயுதம் ஏந்தியவர்களா?, பாடசாலை சென்ற மாணவன் எங்கே போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இக் கவனவீர்ப்பு போராட்டம் சுமார் இரு மணிநேரம் இடம் பெற்றிருந்ததுடன் போராட்டத்தில் 30க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ந-18)

## சர்வதேச சிறுவர் தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கவுள்ளோம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அறிவிப்பு

வவுனியா, ஒக்.1

இந்தமுறை சர்வதேச சிறுவர் தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கவுள்ளோம் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியை எந்த ஓர் அரசாங்கமும் வழங்கவில்லை.

எனவே இந்தமுறை சர்வதேச சிறுவர் தினத்தை நாம் துக்கதினமாக அனுஷ்டிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

ஜனநாயக ரீதியான எமது போராட்டங்களுக்கு அரசினால் பல்வேறு அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் பிரயோகிக்கப்படுகின்றமையால் போராட்டத்தில் கலந்துகொள்ளும் பொதுமக்களின் எண்ணிக்கை குறைவான நிலையில் காணப்படுகின்றது. எமது உறவுகளைத் தேடியே நாம் போராட்டங்களை முன்னெடுக் கன்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. எனவே எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடை நிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம் - என்றனர். (ஞ-110)



## இன்றைய நாள்

**மேடம்:** அனுகுமுறையில் நல்ல மாற்றம் ஏற்படும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய நிலை உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**இடபம்:** சுற்றுப்புற சூழ்நிலை தொந்தரவு தரலாம். பின்விளைவு உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**மிதுனம்:** தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலம் பலம்பெறும். கூடுதல் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரசத் தீர்வு வரும்.

**கடகம்:** நிகழ்வுகள் மாறுபட்டதாக இருக்கும். நல்லவரையும் தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி புரிவது அவசியம். பணவரவு குறைந்த அளவில் இருக்கும்.

**சிம்மம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில்,வியாபார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** பொது நல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி இஷ்ட தெய்வ அருளால் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபா ரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும்.

**துலாம்:** தொடர்பில்லாத பணி சிரமம் தரலாம். செயல்களில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க, நண்பர் உதவுவர். பொருள்கள் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**விருச்சிகம்:** பணிகள் நிறைவேற தாமதமாகலாம். அனுபவசாலியின் ஆலோசனைநம்பிக்கைதரும். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தைக் காத்திடுவீர்கள்.

**தனுசு:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிர்மறையாக பேசுபவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** எதார்த்த பேச்சு, சிலர் மனதை பாதிக்கலாம். எதிர்வரும் பணிகளுக்கு, முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வீர்கள்.

**மீனம்:** நிகழ்வுகளால் அதிருப்தி கொள்வீர்கள். நிலுவைப்பணி துரிதமாகச் செயல்பட வைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சீராகும். செலவு அதிகரிக்கும்.

# வீதி வியாபார நடவடிக்கையால் தொற்று நோய் பரவும் அபாயம்

## வன்னி எம்.பி வினோநோகராதலிங்கம் எச்சரிக்கை

**மன்னார், ஒக்.1**

**வீதியோரங்களில் மரக்கறி மற்றும் பழ வகைகள் விற்பனை செய்யப்படுவதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி, தொற்று நோய் பரவும் அபாயமும் உள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நேற்றையதினம் நடைபெற்ற மன்னார் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான வியாபாரங்களை அவர்கள் தங்களது வாழ்வாதாரம் கருதி மேற்கொண்டு வருவதால், அவர்களுக்கான மாற்று நடவடிக்கைகளைச் செய்து தனியான இடங்கள் அல்லது கடைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

பழ வகைகளை வெட்டியும் விற்பனை செய்து வருகிறார்கள். இவற்றை அதிகமாக சிறுவர்களே வாங்கி உண்கிறார்கள். இதனால் அவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் நேரில் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக சம்பந்தபட்ட தரப்புக்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-213)

# மட்டக்களப்பில் மணல் அகழத் தடை



மட்டக்களப்பு, ஒக்.1

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வயல் நிலங்கள் மற்றும் குளங்களிலிருந்து மணல் அகழ்வதற்கான சிபாரிசு வழங்குவதனை இடைநிறுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, கமநல அபிவிருத்தி திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மத்திய நீர்ப்பாசன திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வயல் நிலங்கள் திருத்துவது என்ற போர்வையில் வயல் நிலங்கள் மற்றும் மேட்டு நிலங்களிலிருந்து மணல் அகழ்தல் நடவடிக்கைகள் இம் மாவட்டத்தில் இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இம் மாவட்டத்திலுள்ள வயல் நிலங்கள் பள்ளமாவதுடன் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையும் பாதிப்படைந்து வருகின்றது.

மேலும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குரித்தான குளங்களிலிருந்தும் கணிசமான மணல் அகழ்வதனால் இவற்றின் ஆழம் அளவுக்கதினமாக அதிகரிக்கப்படுவதுடன் இங்கு நீர் அருந்தவரும் கால்நடைகள் குளத்தில் மூழ்கி உயிரிழக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்து வருகின்றன. அத்துடன் இத் திணைக்களங்களுக்குச் சொந்தமான குளங்கள் அத்தியாவசியமாக திருத்தம் செய்யும் தேவைகள் ஏற்படின் அத் திணைக்களங்கள் ஊடாக மாத்திரம் திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார். (ந-150)





# புளியங்குளத்தில் குடிதண்ணீர் திட்டம்

வவுனியா, ஒக்.1

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட புளியங்குளம் முத்துமாரி நகர் வாழ் மக்களின் நலனுக்காக, தமிழ் விருட்சம் அமைப்பின் முயற்சியினால் குடிதண்ணீர் குழாய்க்கிணறு தொகுதி அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது .

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் கலந்துகொண்டு குடிதண்ணீர்த் தொகுதியை திறந்துவைத்தார். புளியங்குளம் முத்துமாரி நகர் வாழ் மக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமாரால் டென்மார்க் பிராண்டோ அபிராமி அம்மா உபாசகி தாயாரின் நிதிப் பங்களிப்பில் இக் குழாய்க்கிணறு தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந)



சுவிஸில் வசிக்கும் ஜெகதீஸ்வரன் டனிஸ் என்பவரது பிறந்ததினத்தை முன்னிட்டு, தேராங்கண்டல் கலைமகள் முன்பள்ளி மற்றும் உயிலங்குளம் வளர்தமிழ் முன்பள்ளிச் சிறார்கள் 67 பேருக்கான புத்தகப் பைகள், குடிதண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் கதிரேசு பொன்னம்மா நற்பணி மன்றத்தினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ந-222)

## மணல் அகழ்வால்

# நீர் உட்புகும் அபாயத்தில் வன்னேரிக்குள கிராமம்

கிளிநொச்சி, ஒக்.1

**சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக வன்னேரிக்குளத்தின் நீர் குடிமனைகளுக்குள் உட்புகும் அபாயம் எழுந்துள்ளது.**



வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்துக்கு பின்பக்கமாக வெள்ளக் கரைப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

இந்தப் பகுதியில் மணல் அகழ்வுக்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை. கடந்த பத்தாண்டுகளாக வன்னேரிக்குளத்தின் அணைக்கட்டுக்கு அருகில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஏற்கனவே வன்னேரிக்குளம் கிராமம் உவர் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில் குடிமனைகளுக்குள் நீர் புகும் அபாயமும் எழுந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வன்னேரிக்குளம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-ரி2)



## இந்திய உதவித் தூதுவர் சிங் வட மாகாணத்துக்கு விஜயம்

### பல்வேறு தரப்பினரையும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

வடக்குக்கு விஜயம் செய்த இந்திய உதவித் தூதுவர் தீரேந்திரசிங் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது, அவரது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட பௌத்த மதம் தொடர்பான பல்வேறு திட்டங்கள் உட்பட மக்கள் நலம் சார்ந்த திட்டங்கள் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை சம்மேளனம் மற்றும் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் ஆகியவற்றின் மூத்த நிர்வாகிகளையும் சிங் சந்தித்துள்ளார். இந்திய முதலீடுகள் மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் அவர்களுடன் உரையாடியுள்ளார்.

வட மாகாணத்தின் மூத்த அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்த தீரேந்திரசிங் தனது அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் இந்தியாவால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் சார்ந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். (வ-இ)

## கசிப்புடன் மூவர் கைது

கிளிநொச்சி, ஒக்.1

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத கசிப்புடன் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, குமாரசாமிபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் 20 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குமாரசாமிபுரம் காளிகோயிலடி பகுதியில் 02 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-113)

## யானைகளைக் கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.1

யானைகளைக் கட்டுப்படுத்துமாறு முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் கொல்லவிளாங்குளக் கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலபோக நெற்செய்கைக் கூட்டம் நடத்தச் சென்ற அதிகாரிகளிடமே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக இரவு வேளைகளில் கிராமத்துக்குள் நுழையும் யானைகள் தென்னை மரங்களை அழித்து வருகின்றன. இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட பூசணி செய்கை நிலங்களை அழித்துள்ளன.



யானைகளைக் கட்டுப்படுத்த வேலிகளை அமைத்துத் தாருங்கள் என அதிகாரிகளிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-ரி2)

## மானிய உரம் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.1

கிளிநொச்சியில் காலபோக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச கமநல அபிவிருத்தி திணைக்களங்கள் ஊடாக ஏக்கர் அடிப்படையில் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் உரம் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கமநல உத்தியோகத்தர் இதனைத் தெரிவித்துள்ளார். (வ-113)

## கசிப்பு விற்பனை; பெண் கைது

கிளிநொச்சி, ஒக்.1

கசிப்பை விற்பனைக்காக வைத்திருந்த பெண்ணொருவர் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் பளை புலனாய்வு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒன்றரைப் போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான பெண் மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-6)

# இளம் விவசாயிகளுக்கு முதலீட்டு வாய்ப்பு

கொடிகாமம், ஒக்.1

விவசாயத்தில் ஈடுபடும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டு திட்டமிடல் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, காணித் துண்டுகள் வழங்கவும் ஒரு லட்சம் ரூபா முதலீட்டு வாய்ப்புகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை கிராம அலுவலர், பிரதேச செயலக காணி அலகு காணிப் பயன்பாட்டு அலுவலர்கள் மற்றும் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் என்பவற்றில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஆர்வமுள்ள 18 தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவர்கள் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன் இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தத் திட்டத்தின் நோக்கங்களாக, தற்போது குறைந்த அபிவிருத்தியில் உள்ள காணிகளை அபிவிருத்தி செய்தல், உள்நாட்டு அத்தியாவசிய பயிர்ச் செய்கைகளின் உற்பத்திக்குத் தேவையான காணிகளை வழங்குதல், இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு உரியதாகவுள்ள காணிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தல், அவற்றை வங்கி முதலீடுகளுக்குப் பிணையாக விருத்தி செய்தல், புதிய காணிகளை வழங்குவதன் மூலம் இளம் முயற்சியாளர்களை வலுவூட்டல் என்பன அமைகின்றன. (வ-159)

## கசிப்பு உற்பத்தி தளம் முற்றுகை

### சந்தேகநபர் தப்பியோட்டம்

கிளிநொச்சி, ஒக்.1

கசிப்பு உற்பத்தி இடம்பெறுகிறது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலுக்கு அமைய அல்லிப்பளை பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது சந்தேகநபரொருவர் தப்பிச் சென்றுள்ளார். அந்தப் பகுதியில் இருந்து ஒரு பெரல் கோடாவும், தண்ணீர் இறைக்கும் மோட்டார் மற்றும், தண்ணீர் இறைக்கும் குழாய் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

தப்பிச்சென்ற சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளன என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இன்று சிறுவர் மற்றும் முதியோர் தினங்கள் கடைப்பிடிக்கப்படுவதையொட்டி, இந்தக் கட்டுரைகள் பிரசுரமாகின்றன.



# முதுமை சுமையல்ல, கொடை!

கௌசி

அழகு எதில் இருக்கின்றது என்றால், அது பார்ப்பவர் கண்களில் இருக்கின்றது. இளமையும் அழகுதான் முகத்தில் ரேகை படர்ந்த முதுமையும் அழகுதான். வாழ்வது அவசியமென்றால், முதுமையையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதும், ஆதரிப்பதும் அவசியமே.

முதுமை அருகே இருப்பது இளமைக்கு தொந்தரவு என்று நினைப்பதும், முதுமையைப் பாதுகாக்க இளமைக்கு காலம் கைகொடுக்கவில்லை என்று இளையவர்கள் கலங்குவதும், பிள்ளைகள் மகிழ்ச்சிக்கு இடையூறு எம்மால் வந்துவிடக்கூடாது என்றும், அமைதியாக யார் தொந்தரவும் இன்றி வாழவேண்டும் என்றும், இல்லை கடைசி காலத்தில் கலகலப்பாக பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி விளையாடி நான் வாழவேண்டும் என்று முதுமை நினைப்பதும் அவரவர் மனநிலையையும் வாழ்ந்த சூழலையும் பொறுத்தது.

வயதானவர்கள் என்னும் போது தமது வேலைகளைத் தாமே செய்து கொண்டு தமது பிள்ளைகளுக்கு தம்மாலான உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்ற வயதானவர்கள் என்றும், தம்மால் தமது வேலைகளைச் செய்யமுடியாது, சுயமாக நடந்து திரியமுடியாது, தமது உணவுகளைத் தாமே எடுத்து உண்ணமுடியாது, தமது நினைவுகளை இழந்து காணப்படுகின்ற முதியவர்கள் என்றும் இரண்டுவிதமாக வேறுபிரித்துப் பார்க்கலாம். வயதானவர்களை இளையவர்கள் தம்மோடு வைத்திருந்தால், அவர்கள் தொழில் ரீதியான வளர்ச்சிக்கும் பிள்ளைகளின் உடல் அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்பது உண்மை.

தாம் வளர்வதற்கும் தாம் கற்பதற்கும் தமது உடல்நிலை உறுதியாவதற்கும் தமக்கென ஒரு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கும் பெற்றோரைப் பயன்படுத்தும் பிள்ளைகள் தமக்கென ஒரு வாழ்க்கை அமைந்தபின் தேவைப்படாத பொருளை தூக்கி எறிவதுபோல் எறிந்துவிடுவது அல்லது சுமையாக எண்ணுவதுவழமையாகிவிட்டது.

காலச்சுழற்சியில் என்றோ ஒருநாள் எல்லோரும் மறையத்தான் போகின்றார்கள். இளையவர்கள் பிரிந்தபின் கலங்குவதைவிட வாழப்போகும் சிறிதுகாலமாவது அவர்களைப் பேணிக் கொள்வோம் என்று நினைக்க வேண்டியது அவசியம். எதிர்காலத்தில் தமது நிலை என்ன என்று சிந்தித்துப் பார்த்தாலே பெற்றோரைத் தவிக்கவிடும் பிள்ளைகள் திருந்திவிடுவார்கள்.

மூத்தோரைப் பேணி, நானிலத்தில் நலமோடும், பலமோடும் வாழ வழிவகை செய்வதனூடாக, எங்கள் சமூகத்தின் வீரியத்தை இன்னும் சிறப்பாக்குவோம்.





# துஷ்பிரயோகங்களில் இருந்து மீட்போம் சிறுவர்களை!

த. கார்த்திகா
மூன்றாம் வருடம்.
ஊடககற்கைகள் துறை.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

18 வயதுக்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் சிறுவர் என்பதனுள் அடங்குவர். இவர்கள் பெற்றோரின் அன்பு ஆதரவு என்பவற்றுடன் அவர்களுடன் தங்கி வாழ்பவர்களாக உள்ளனர்.

சிறுவர்களுக்குஉடல்ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து விடயங்களும் சிறுவர் துஸ்பிரயோகம் என்பதனுள் அடங்கும். சிறுவர் துஷ்பிரயோகமானது, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை மீறல் என்ற வகைகளில் இடம்பெறுகின்றன.

பிள்ளைகள் பாதுகாப்பற்ற நிலையில் தனித்து விடப்படல், பெற்றோர் கவனக்குறைவாக பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் கவனக்குறைவாக வளர்தல், பெற்றோர் பிள்ளைகளுக்கு வழங்கும் அளவுக்கு மீறிய சுதந்திரம், குடும்பத்திலுள்ள வறுமை, பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் கல்வி அறிவு குறைவு, பெற்றோர் வேலை நிமித்தம் வெளிநாடு செல்லுதல், குடும்பத்தில் தாயோ அல்லது தந்தையோ பிரிந்து வாழுதல், பெற்றோரில் ஒருவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் மற்றவர் மறுமணம் செய்து கொள்ளுதல், குடும்பத்திலுள்ள பெற்றோரில் சிலர் போதைப் பழக்கம் உடையவர்களாக இருத்தல் போன்ற பல்வேறு காரணிகளால் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.



சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களை நோக்கின் சிறுவர்களுக்கு தமது கருத்துக்களை மற்றவர்களுக்கு கூறுவதற்கும், தாம் சரி என்று நினைப்பதை பேசுவதற்கும், தாம்விரும்பிய இடத்தில் கல்வி கற்பதற்கும் , பெற்றோர்களிடமிருந்து அன்பு ,அரவணைப்பு, போசாக்கான உணவு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு. சிறுவர்களுக்கு நோய் ஏற்படும்போது அவர்களுக்கு வைத்திய வசதி அளிக்கப்படாமல் இருப்பது சிறுவர் உரிமை மீறலாகும். அதேவேளை ஓய்வு நேரத்தில் விளையாடுவதைத்தடுப்பதும் சிறுவர் உரிமை மீறலாகும். இவ்வாறு இவர்களுடைய உரிமைகள் மீறப்படும் போது அது துஷ்பிரயோகமாக மாறுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. நோய் ஏற்படுதல், மன அழுத்தம், தவறானமுடிவு, சமூகத்தில் மதிப்பு இழக்கப்படல் போன்றன ஏற்படுகின்றது. இதனால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதுடன் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாக மாறுகின்றது. இதன் விளைவாக போதைக்கு தூண்டுதல், சமூகவிரோத செயல்களில் ஈடுபடுதல், போன்ற துர்ப்பாக்கிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு பல்வேறு முறைகளை கையாள்வதன் மூலம் நல்ல நிலைக்கு அவர்களை மாற்ற முடியும். சிறுவர் துஷ்பிரயோகத்தை மேற்கொள்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை வழங்குதல், சிறுவர்களுக்கு துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்த்தல், பெற்றோர் பிள்ளைகள் மீது அன்பு ஆதரவுடன் இருத்தல், பிள்ளைகள் தனியாக இருப்பதைதவிர்த்தல், போன்றவற்றின் மூலம் சிறுவர்களைத் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.







வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. இதில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ஐ)




யாழ்ப்பாணம் – நல்லூர் சீரடி சாயி கோவிலின் தேர்த் திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

படங்கள்: ஐ.சிவசாந்தன்



# நேற்று சிறப்பாக நடைபெற்ற சகாய அன்னைத் திருவிழா



வவுனியா.ஒக்.1

வவுனியா சகாய மாதா புறம் தூய சதா சகாய மாதா ஆலயத் திருவிழா நேற்று புதன்கிழமை மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், ஆசீர்வாதமும் நடைபெற்றன.

இதன் போது பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளார், வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ராஜநாயகம் அடிகளார், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார், மகாறம்பைக்குளம் பங்குத் தந்தை அருட்பணி மரியக்கிலன் அடிகளார் ,

அருட்பணி பெணி அடிகளார், தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி ஆரோக்கியசாமி அடிகளார் உள்ளிட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-56)



# பெற்றோர் இல்லாமல் பிறந்த குழந்தையே 20ஆவது திருத்தம்!

### போட்டுத் தாக்கும் சஜித் அணி



கொழும்பு, ஒக். 1
அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு பெற்றோர் இல்லாமல் பிறந்த குழந்தையைப் போல் உள்ளது. இந்தத் திருத்தத்தின் மூலம் ஜனநாயகத்தைக் குழப்புவதற்கு அரசு முயல்கின்றது. இவ்வாறு குற்றஞ்சாட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர், நீதிஅமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குக் கூடத் தெரியாமல் அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவை உருவாக்கியுள்ளனர். ஜனாதிபதியையும் அரச தரப்பினரையும் சர்வாதிகாரிகளாக மாற்றும் நோக்கத்துடனேயே 20ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்களின் இறைமை நாடாளுமன்றத்தின் ஊடாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. ஆனால் தற்போது மக்களின் இறைமை அழிக்கப்படுகின்றது.

பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளை கருத்தில்கொள்ளாமல் முடியாட்சியை ஏற்படுத்த 20ஆவது திருத்தச் சட்டவரைவு முயல்கின்றது, என்றார். (ஓ.5,22)

# 13 இல்லாத அரசமைப்பே நாட்டுக்குத் தேவையானது

### *சிங்கள கடும்போக்குவாதிகள் வலியுறுத்து*

**கொழும்பு, ஒக்.1**
**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்கு இந்தியப் பிரதமருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. '13' இல்லாத புதிய அரசமைப்பே நாட்டுக்கு அவசியம். இவ்வாறு பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார்.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேரர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார். 'நாட்டில் மாகாணசபைகள் இயற்கை மரணம் அடைந்து விட்டன. எனவே, அவற்றுக்கு மீள உயிர்கொடுத்து எழுப்ப முற்பட்க் கூடாது. ஆனாலும், பரிசுப்பொதியுடன் மோடியால் தகவலொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதாவது, 150 டொலர் மில்லியனை வழங்க தயாராகவுள்ளோம், 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே அந்த தகவலாகும்.

மோடி அவர்களே, நீங்கள் வழங்க எதிர் பார்க்கும் கடனுதவிக்கு நன்றிகள். ஆனாலும், 13 ஐ நடைமுறைப்படுத்துமாறு அழுத்தம் பிரயோகிக்க உங்களுக்கு இருக்கும் உரிமை என்ன? இந்தியாவின் இந்த கோரிக்கையை ஏற்க நாம் தயாரில்லை. அதற்கு எதிராக போராடுவோம்.

13 பற்றி தற்போது கதைப்பதில் பயன் இல்லை. ஏனெனில் புதிய அரசமைப்பில் 13 வரப்போவதில்லை.

13 மற்றும் பிரிவினை வாதம் இல்லாத அரசமைப்பையே நாம் எதிர்பார்க்கின்றோம், என்றும் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5,44)

# 20 நடைமுறைக்கு வரமுன்பே வன்முறை அரசியல் ஆரம்பம்!

### *அரச குண்டர்குழுவே எதிர்க்கட்சி தலைவரைச் சீண்டியது*

கொழும்பு, ஒக்.1
20 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைக்குவருவதற்கு முன்னரே வன்முறை அரசியல் ஆரம்பமாகி விட்டது. இதன்ஓர் அங்கமாகவே எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்ற கூட்டம் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியின் குண்டர்குழுவே இதன் பின்னணியில் செயற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவே 19 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம், கூட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரம், ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான சுதந்திரம் என அனைத்தும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது மேற்படி உரிமைகள் பறிக்கப்பட்டுவருகின்றன.

20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நடைமுறைக்குவரவுள்ள நிலையில் பயங்கரவாத வன்முறைக் குழுக்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்து செயற்பட ஆரம்பித்துள்ள யுகம் உருவாகியுள்ளது. கலந்துரையாடலுக்கு பதிலாக துப்பாக்கியால் பதில் வழங்கப்படும் யுகமும் வந்துள்ளது. ஜனநாயகத்தின் மிக முக்கிய அங்கம் எதிர்க்கட்சிதான். அந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு சுதந்திரமாக கூட்டமொன்ற நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ரத்மலானையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவரின் கூட்டத்துக்கு அரசின் வன்முறைக்குழு குழப்பம் விளைவித்துள்ளது. 19 மூலம் நாம் உருவாக்கிய ஜனநாயக ஆட்சி முறையை ராஜபக்ச குழு அழிக்க முற்படுகின்றது என்பது இதற்கு சான்றாகும். 2015 இல் ஐக்கிய தேசியக் கட்சியால் மைத்திரிபால சிறிசேனவுக்காக நடத்திய கூட்டத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. சூத்திரதாரிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும், நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட நபர் நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார். எனவே, கூட்டங்கள்மீது தாக்குதல் நடத்தினால் நாடாளுமன்றம் செல்லலாம் என நினைத்து குண்டர்குழு செயற்பட ஆரம்பித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் கூட்டத்தில் குழப்பம் விளைவித்த குண்டர் குழுவினரை சட்டத்தின்முன் நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்கின்றோம். பதவியை பாதுகாத்துக்கொள்ளாது, கடமையை சரிவர நிறைவேற்றுமாறு கோருகின்றோம். ஒரே நாடு ஒரே சட்டம் எனக்கூறியே ராஜபக்ச அணி ஆட்சிக்குவந்தது. எங்கே அந்தச் சட்டம்? வன்முறை அரசியலை நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (ஓ,5,44)

# நவம்பர் 17 இல் சபையில் பட்ஜெட்

கொழும்பு, ஒக்.1
புதிய அரசின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (ஓ.இ)



# சஜித்தின் கூட்டத்தில் கல் வீச்சு

கொழும்பு, ஒக்.1
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்துகொண்டிருந்த கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

சஜித் பிரேமதாச கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது பேசிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, நான் எந்தவொரு சவாலையும் நேருக்கு நேர் எதிர்கொள்ளத் தயார்.

யாருக்கும் பயப்படபோவதில்லை. கல்வீசி தாக்குதல் மேற்கொண்டாலும் நான் இந்த இடத்தை விட்டு செல்லப்போவதில்லை, என்று தெரிவித்தார். (ஓ.5)

# ரிஷாத்தின் சகோதரர் விடுவிப்பு

கொழும்பு, ஒக்.1
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இளைய சகோதரரான ரியாஜ் பதியுதீன் என்று அறியப்படும் பதியுதீன் மொஹமட் ரியாஜ் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், அன்று முதல் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வந்தார்.

விசாரணைகளில் அவருக்கும், ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக நியாயமான சான்றுகள் வெளிப்படுத்தப்படாத நிலையில், அவர் நேற்று முன்தினம் விடு விக்கப்பட்டார் என பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன. (ஓ.இ)

# கல்விக் கட்டமைப்புக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.1**

**இலங்கையின் கல்விக் கட்டமைப்பு அபிவிருத்திக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளது என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலினா பி.டெப்ளிஸ்ட் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் ஆங்கிலக் கல்வியை கட்டியெழுப்புவதற்கும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு ஆங்கில கல்விப் பாடநெறிகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கும் அமெரிக்கத் தூதரகத்தின் ஒத்துழைப்பை பெற்றுத்தர முடியும் என்று அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் புதிய அரசாங்கத்தினால் கல்விக் கட்டமைப்பில் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளுக்கு அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத் தர முடியும் என்பதனையும், ஒத்துழைப்பு அவசியமாகும் துறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறும் அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# வீட்டின் முன்னால் வெடிமருந்து மீட்பு

கிளிநொச்சி, ஒக்.1

வீதியில் வீசப்பட்டிருந்த நிலையில் வெடிமருந்தொன்று மீட்கப்பட்டுள்ளது என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்பியன்பற்றுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன்னால் கோடைற் என்ற வெடிமருந்தே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. சுமார் 850 கிராம் எடையுடைய அந்த வெடிமருந்து அவ்விடத்துக்கு எவ்வாறு வந்தது என்பது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்படுகின்றன. (வ-6)

# சாரணர் மன்ற உறுப்பினர்களாக வடக்கிலிருந்து மூவர் தெரிவு!!



வவுனியா,ஒக்.1

இலங்கை இராணி மற்றும் ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் உறுப்பினர்களாக வடக்கில் இருந்து மூன்று சாரணர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மன்றத்தின் 20 ஆவது பொதுக்கூட்டம் சாரணர் தலைமைக் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்திலிருந்து ஜனாதிபதி விருதைப் பெற்றவரும், வவுனியா நகர சபையின் உறுப்பினருமான சு.காண்டீபன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜனாதிபதி விருதைப் பெற்றவரும் சட்டத்துறை மாணவனுமான அமல்ராஜ், யாழ் மாவட்டத்தை சேர்ந்த ஜனாதிபதி சாரணனும் வங்கி ஊழியருமான அபிஷன் ஆகியோர் இந்த மன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். அந்தவகையில் வடக்கிலிருந்து முதன் முதலாக மூவர் தெரிவாகியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் முதன்மை அதிதியாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கலந்துகொண்டார். (ற-110)





# கடும் காற்று: வடமராட்சியில் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், ஒக்.1

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட கடும் காற்று மற்றும் அதனுடன் கூடிய மழையினால் வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் பயன்தரு மரங்களான பனை, தென்னை, வாழை மற்றும் மாமரம் என்பன முறிந்தும் வேருடனும் சாய்ந்தும் உள்ளன.

மேலும் வீட்டைச் சற்றிக் கட்டப்பட்ட இரண்டு பக்க மதில்களான சுமார் 430 அடி மதில் முற்றாக விழுந்துள்ளது. இதன் காரணமாக வீட்டின் உரிமையாளருக்கு பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7026)

# பொதுமக்கள் தினம் மாற்றம்; வந்த மக்களுக்கு ஏமாற்றம்

சாவகச்சேரி, ஒக்.1

பொதுமக்கள் தினம் திங்கள் கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதை அறியாமல் வருகை தந்த பொதுமக்கள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதுவரை காலமும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அரச அலுவலகங்களில் பொதுமக்கள் தினமாக நடைமுறையில் இருந்தது. அந்நாளில் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற அரச அலுவலகங்களுக்கு வருகை தந்தனர். இந் நிலையில் ஜனாதிபதியின் அறிவிப்பையடுத்து பொதுமக்கள் தினம் திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டது. இதற்கான சுற்றுநிருபங்கள் தாமதமாகவே அரச அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பொதுமக்கள் தினம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஹர்த்தால் காரணமாக மக்கள் அன்று வரவில்லை.

அதற்குப் பதிலாக நேற்று அலுவலகங்களுக்கு வருகை தந்திருந்தனர். ஆனாலும் நேற்று, வெளிக்கள அலுவலர்கள் தமது கடமைகளுக்குச் சென்றதால் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிய மையை அவதானிக்க முடிந்தது. (வ-9)

# அனுமதியற்ற வலையமைப்புகள் இன்று தொடக்கம் செயலிழக்கும்

## தொலைத்தொடர்பு ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.1

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியற்ற அலைபேசி உள்ளிட்ட வலையமைப்புகள் கொண்ட அனைத்து சாதனங்களும் இன்று தொடக்கம் சிம் அட்டை செயலிழக்கச் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அலைபேசி உள்ளிட்ட வலையமைப்பு சாதனங்களைக் கொள்வனவு செய்யும் போது இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் தற்போது பாவனையில் உள்ள அலைபேசி உள்ளிட்ட வலையமைப்பு சாதனங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்ட சிம் அட்டைகளுடன் இயங்க அனுமதிக்கப்படும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒஷத சேனநாயக்க தெரிவித்துள்ளார். (வ-இ)

# மழலைகள் பூங்காவின் சிறுவர் தின நிகழ்வு

தெல்லிப்பழை.ஒக்.1

தெல்லிப்பழை மழலைகள் பூங்காவின் சிறுவர் தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி நிர்வாக குழுத் தலைவர் சு.சேதுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சரச்சந்தர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர்களான என். சிவகரன் மற்றும் எம்.புராதனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் .(ஐ)

# சாரதிகள் மூவருக்கு 1,50,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி ஒக்.1

அனுமதிப்பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிய சாரதிகள் மூவருக்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு 2 லட்சம் ரூபாவும், ஏனைய இருவருக்கு தலா ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வீதம் மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.(ஐ-9)

# 300 ஏக்கருக்கு மேல் உழுந்து பயிர்ச் செய்கை

## துணுக்காய் கமநலசேவை உத்தியோகத்தர் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, ஒக்.1**
**முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில், உழுந்துப் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளதால், இந்த முறை 300 ஏக்கருக்கு மேல் உழுந்துப் பயிர்ச்செய்கையை மேற் கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என துணுக்காய் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.**

துணுக்காய் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த முறை ஏறக்குறைய 300 ஏக்கருக்கும் அதிகமான அளவிலே உழுந்துப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது என்று தீர்மானித்திருக்கின்றோம்.
ஏற்கனவே செய்யப்பட்ட உழுந்துப் பயிர்ச் செய்கையிலே அண்ணளவாக 350 கிலோ கிராம் வரையிலான உழுந்து, ஒரு ஏக்கர் வயலில் இருந்து பெறப்பட்டிருக்கின்றது. இது எமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்-என்றார். (ந-246)



### கராத்தே பயிற்றுநர்களுக்கான
# விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.1
வடக்கு மாகாண கராத்தே பயிற்றுவிப்பாளர்களுக்கான விசேட செயலமர்வு யாழ்ப்பாணம் கிரீன் பீல்ட் சனசமூக நிலைய விளையாட்டுக் கழக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வடக்கு மாகாண கராத்தே பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், நெறியாளர்களின் தரத்தை உயர்த்துவதற்காக இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
இந்த செயலமர்வு தொடர்பில் வடக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் கரேத்தே பயிலும் மாணவர்கள் கராத்தே துறையில் வளர்ச்சியடைந்து தேசிய ரீதியில் அதாவது மாவட்ட, மாகாண தேசிய ரீதியில் நிறைய பதக்கங்களைப் பெற்று முன்னேறி வருகின்றனர்.
அதனை மேலும் வலுப்படுத்துவதற்காக வடக்கு மாகாணத்தில் உள்ள கராத்தே நெறியாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் தரத்தை உயர்த்தும் முகமாக வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கராத்தே ஆசிரியர்களுக்குமான விசேட செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.
கராத்தே சம்மேளத்தில் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நெறியாளர்களைப் பதிவுசெய்து அவர்களின் தரத்தை உயர்த்துவதற்காக, இலங்கை கராத்தே சங்கத்தைச் சேர்ந்த இலங்கை ரீதியில் நடுவராக செயற்பட்டுவரும் சிரான் அலெக்சாண்டர் மற்றும் ரவூப் ஆகியோர் நெறியாளர்களாகக் கலந்துகொண்டு, இந்த செயலமர்வை மேற்கொண்டுள்ளார்கள். வடக்கு மாகாண கராத்தே மாணவர்கள் போட்டிகளின்போது வெற்றி பெற முடியாததற்கான காரணங்களை அறிந்து அதனை மாற்றியமைக்கும் முகமாக இந்த பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார் . (ந-20)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் விசேட அமர்வு

கிளிநொச்சி, ஒக்.1
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் பகல் 12 மணிக்கு இடம்பெற்றது.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.கயன் தலைமையில் இந்த அமர்வு நடைபெற்றது.
இந்த விசேட அமர்வில் ஆதன வரி அறவீடு, வீதிகள் புனரமைப்பு, வீதி விளக்குகள் பொருத்துதல், பிரதேச சபையில் மரங்களை ஏலத்தில் விற்பனை செய்தல் உள்ளிட்ட பிரதேச அபிவிருத்திக்குத் தேவையான விடயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. (ந-6)

# மானிப்பாயில் வருடாந்த தற்காப்பு செயன்முறை

யாழ்ப்பாணம், ஒக்.1
வருடாந்த தற்காப்பு செயன்முறை நிகழ்
கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.கே.எஸ் தற்காப்
கலையகத்தின் நிறுவுநர் எந்திரி ரொசிகிர
தலைமையில், மானிப்பாய் நகரசபை மண்
பத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில்
இலங்கை முழுவதிலிருந்தும் 400 இற்கு
மேற்பட்ட மாணவர்கள், அவர்களது பெற்றோ
கள் மற்றும் உறவினர்கள் கலந்துகொண்ட
பிரதம விருந்தினர்களாக சத்திர சிகிச்சை நி
ணர் வைத்தியர் மதிவாணனும், அவரது மனை
வியும் கலந்து சிறப்பித்தனர்.
இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் ஜே.கே.எஸ் த
காப்பு கலையகத்தின் சிறுவர்களினால் த
காப்பு செயன்முறைகளும் விளக்கங்களு
காண்பிக்கப்பட்டதுடன், சிறு வயதில் அவ
ளின் உற்சாகமான செயற்பாடு பார்வையாள
களை மெய் சிலிர்க்க வைத்தது. பயிற்சியி
சிறப்பான பெறுபேற்றை சிறுவர்கள், பெ
கள், ஆண்கள் என அனைவரும் வெளி
படுத்தி இருந்தார்கள்.
மேலும் மாணவர்களினால் தற்காப்புக்கல
உத்திகளும் செயன்முறைகளுமாக ஓ
உடைத்தல், நெருப்பு வளையத்தினூடாக பா
தல் போன்ற வியத்தகு துல்லியமான நிகழ்
களும் காண்பிக்கப்பட்டன.
ஜே.கே.எஸ் தற்காப்பு கலையகத்தின் இந்த
செயற்பாடு எதிர்காலத்தில் தற்காப்புக் கல
யில் பெரிய வளர்ச்சியை உருவாக்கும் என
தில் ஐயமில்லை. கலந்துகொண்ட அனைத்
மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌ
விக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-222



# பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள்

வவுனியா, ஒக்.1
'பசுமைப்புரட்சி' கருத்திட்டத்தின் கீழ், வவுனியாவில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கடந்த இரு தினங்களாக இடம்பெற்றது. பிரபாகரன் நடராஜா அனுசரணையுடன் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மகுணசிங்கம் சுஜீவனால் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, பாடசாலைகளில் நடப்பட்டன.
நேற்றுமுன்தினம் தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கும், நேற்று வடக்கு வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
இதனைத் தொடர்ந்து அனைத்துப் பாடசாலைகளுக்கும், பத்து ஆயிரம் வேப்ப மரக்கன்றுகள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளன என பிரதேச சபை உறுப்பினர் சுஜீவன் இதன்போது தெரிவித்தார். (ந-110)



# யானைகளால் அழிக்கப்படும் விவசாய நிலங்கள்

## இழப்பீடுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

முல்லைத்தீவு, ஒக்.1
முல்லைத்தீவு துணுக்காய்ப் பகுதி விவசாய நிலங்களைக் காட்டு யானைகள் சேதப்படுத்துகின்றன என்றும், இதனால் கடந்த சிறுபோகத்தில் பாதிப்பை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கமநலசேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளார். துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலபோகத்தில் 37 விவசாயிகளுக்குரிய, 24 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையிடமிருந்து 4 இலட்சத்து 31 ஆயிரத்து 650 ரூபா நிதி கிடைக்கப்பெற்று, அவர்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த வருட சிறுபோகத்தில் நான்கு விவசாயிகள் தம்முடைய மூன்றரை ஏக்கர் விவசாய நிலங்கள் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன என எம்மிடம் முறையிட்டுள்ளனர்.
இந்த விவரங்களை கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு அனுப்பி, அவர்களுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றோம் - என்றார். (ந-246)

# 20ஆவது திருத்தத்துக்கு யானை கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக்.1

மக்களின் இறையாண்மை தனிநபரிடம் வரையறுக்கப்படுகின்றமைக்கு நாங்கள் எதிரானவர்கள் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம்.

20ஆவது அரசமைப்புத் திருத்த வரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அகிலவிராஜ் காரியவசமும் நீதிமன்று வந்திருந்தார். அங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய தேசியக்கட்சி 20 ஆவது அரசமைப்பு திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக 2 மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. நாங்கள் 20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கின்றோம்.

மக்களின் இறையாண்மை தனிபர் ஒருவரிடம் வரையறுக்கப்படுகின்றமையே நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம். சுயாதீன ஆணைக்குழுக்கள், கணக்காய்வு திணைக்களம் மற்றும் ஜனாதிபதியின் அதிகாரம் உள்ளிட்ட முக்கிய பல விடயங்களில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.-என்றார்.

(எ-இ)

# இலங்கையில் நடப்பது பெரும் உரிமை மீறல்!

## ஐ.நா. அமர்வில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.1**

**இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஒகஸ்ட் 30ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளை நினைவுகூருவதை இராணுவமும், பொலிஸும் நீதிமன்றத்தின் ஊடாகத் தடைசெய்தன. இந்தச் செயலானது இலங்கை அரசின் தமிழின அழிப்புக்கு எதிராகவும் நீதிக்காகவும் போராடுவதைத் தடை செய்யும் பெரும் மனித உரிமை மீறலாகும்.**

இவ்வாறு ஐ.நாவில் நடைபெறும் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத்தொடர் கடந்த 14ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் இரண்டாவது வர்ரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில் இடம்பெற்ற பிரிவு 3 - அனைத்து மனித உரிமைகள் உட்பட சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான பொது விவாதத்தில் பிரான்ஸ் தமிழர்களின் பண்பாட்டு அமைப்பின் சார்பாக உரையாற்றிய பிரபாகரன் அர்த்னா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மை நீதியின் சிறப்பு அறிக்கையாளர் வழங்கிய அறிக்கையில் தமிழர்களுக்கு நடந்த மனித உரிமை மீறல்களை பட்டியலிட்டதை வரவேற்கிறேன். 11 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் அமைப்பு வடிவ இன அழிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இராணுவ ஆக்கிரமிப்பால் புதிய இலங்கை அரசும் தொடர்ந்து தமிழர்களின் வாழ்வை அழிக்கின்றது.

ஐ.நாவின் ஆய்வில் கண்டுபிடித்ததுபோல சர்வதேச சட்டப்படி தமிழின அழிப்பு குற்றங்களுக்குப் பொறுப்பான இராணுவக் குற்றவாளிகளை-பதவி உயர்வுக்கு நியமித்ததை இந்த அவைக்கு நினைவுபடுத்துகிறேன். தொண்டு நிறுவனங்களை கண்காணிக்கவும் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சுக்குக் கீழ் செயற்படவும் தொண்டு நிறுவனங்களை ஒழுங்குபடுத்தவும் பாதுகாப்பு அமைச்சகத்தை நியமிப்பது மிகவும் கவலையைத் தருகின்றது.

சிங்கள பௌத்த தேசியத்தை அரசு பாதுகாத்து வளர்ப்பதால் ஈழத்தமிழர்கள் ஓரங் கட்டப்படுகின்றனர். இலங்கை ஜனாதிபதியின் தொல்லியல் செயலணியில் 6 பௌத்த துறவிகளை மேலும் சேர்த்திருக்கின்றனர். ஆனால், ஒரு தமிழரைக்கூட சேர்க்கவில்லை-என்றார். (எ-22)

## பெறுகை அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை சபை நிதி -2020

1. சபை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி விளக்குகளை கொள்வவு செய்வதற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.
2. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதி மின் விளக்குகளை கொள்வனவு செயவதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
3. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப் படுகின்றது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 02.10.2020 ஆம் திகதியிலிருந்து 16.10.2020 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 19.10.2020 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/03/C.F/12/2020 | Supplying of 50W LED Street Light at Pachchillaipalli Predeshiya Sabah | 250 Nos ±10% | 20,000.00 | 18.01.2021 |

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

- உங்களுக்குள் இருக்கும் வெற்றியாளனை வெளிக் கொணர்வதற்கு.
- உங்கள் நிதி நிலமையை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு.
- உங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு.

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

**இளைஞர்களே!**
**யுவதிகளே!**
**இல்லத்தரசிகளே!**

சிறப்புத் தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களை உடைய சர்வதேச நிறுவனத்தினால் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**இடம்:- திண்ணை ஹொட்டல், திருநெல்வேலி**
**காலம்:- 03.10.2020**
**நேரம்:- காலை 9 மணி- மதியம் 12 வரை**

ஆலோசகர்:- நிபுணத்துவம் பெற்ற பயிற்றுவிப்பாளர்
திரு. அருமைநாயகம் துஷ்யந்தன்
[MBA, HNDA, Dip. TTHM, Adv. Dip. HR]

**தொடர்புகளுக்கு: 077 068 7733**

குறிப்பு: அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் உங்கள் வரவை உறுதிப்படுத்த முந்துங்கள்.

"நீ எழுந்து நட
உனக்கான பாதை உருவாகும்"

"அனுமதி இலவசம்"

# அரச இல்லத்தை விட்டு வெளியேற நளினுக்கு உத்தரவு

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நளின் பண்டாரவை, கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான இல்லத்தில் இருந்து வெளியேற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்காமை சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சு நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து வெளியேறுமாறு பலமுறை கடிதம் மூலம் அறிவித்திருந்த போதும் நளின் பண்டார அதில் இருந்து வெளியேறவில்லை என்ற காரணத்தால், இந்த நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் நீதிமன்றத்தில் செய்துள்ள முறைப்பாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

### திருமதி திவ்வியபவானி சிவமோகன்



பிறந்தது 09.06.1957 — மறைந்தது 30.09.2020

மண்டைதீவு மற்றும் புங்குடுதீவைப் பூர்வீக இடமாகவும் 28, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திவ்விய பவானி சிவமோகன் நேற்று (30.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகம் (மேனாள் பிரதம எழுதுவினைஞர்) மற்றும் இரத்தினம் (ஓய்வுநிலை ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை) தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கலாநிதி கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை (மேனாள் துணை அதிபர், யாழ் இந்துக் கல்லூரி), ஞானபூரணி (மேனாள் ஆசிரியை, கந்தர் மடம் சைவப் பிரகாச மகா வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சிவமோகனின் அன்பு மனைவியும் சிவநயனி (உதவிப் பதிவாளர் நாயகம் திணைக்களம் - வடமாகாணம்), சிவசங்கரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சர்வேஸ்வரா (விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ் பல்கலைக் கழகம்), கௌரிசங்கர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் குகப்பிரணவி, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வசந்தகுமார் (ஐக்கிய இராச்சியம்), நளினி (அவுஸ்திரேலியா), வசந்தி (அவுஸ்திரேலியா), சாந்தி (அவுஸ்திரேலியா), துஷ்யந்தி (மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் மூத்த சகோதரியும் ஞானசம்பந்தனின் (சிவாஜி) பாசமிகு அண்ணியும் கமலா (ஐக்கிய இராச்சியம்), விமலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), கணேசன் (அவுஸ்திரேலியா), உதயன் (அவுஸ்திரேலியா), Dr. குமரவேள் (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜன், ஸ்ரீலக்ஷ்மி, கார்த்திக், சாயிபாரதி, விஜய், நிலானி, நிவேதா, எழினி, வேளினி, வேணிலா ஆகி யோரின் பாசமிகு பெரியம்மாவும் ரெபேக்காவின் மாமியும் அஸ்வினின் அத்தையும் மாயாவின் பேர்த்தி யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 844 9739, 021 222 7302

# நிதானமாக செயற்பட வேண்டிய காலத்தில் சிறுபான்மை மக்கள்!

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் கூறுகிறார்

திரும்பும் திசையெல்லாம் நெருக்கடிகள் நிறைந்திருக்கின்றமையால் மிகவும் நிதானமாகவும், கவனமாகவும் சிறுபான்மையினர் காய் நகர்த்த வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் கடந்த காலங்களில் சிறுபான்மையினர் தவறிழைத்து விட்டோம் என்பதை தற்போது காலம் உணர்த்தி நிற்கின்றது.

உரிமைகளையும் நலனோம்பு விடயங்களையும் அபிவிருத்திகளையும் அடைந்து கொள்வதில் சிறுபான்மை மக்களின் போராட்டக் குரலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் உறுதியாக இருந்து வந்திருக்கின்றது.

சிறுபான்மைக் கட்சிகள் இணைந்து கொண்டு ஒரு பேச்சு மூலமாக நாங்கள் எங்களது அபிலாஷைகளை அடைந்து கொள்வதில் முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும். சிறுபான்மையினருக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை முதலில் தீர்க்க வேண்டும்.

இந்த விடயத்திலே சிறுபான்மைக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு முதலில் குறைந்தபட்சம் கலந்துரையாடலையாவது செய்ய வேண்டும். அதன்மூலம் பல விடயங்களை சிறுபான்மையினர் சாதித்துக் கொள்ள முடியும்.

இவற்றுக்கு அப்பால் அரசாங்க த்தை விரோதத்தன்மையுடன் பார்க்காமல் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கத்தை அணுகி அவர்களுடன் பேச வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது.-என்றார்.

(எ-இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 15 . 11 . 1932



உதிர்வு 31 . 08 . 2020

### திருமதி
### தங்கம்மா சிதம்பரப்பிள்ளை

கடந்த 31.08.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அழைப்பும்

தோற்றம் 22 . 10 . 1954



மறைவு 01 . 09 . 2020

கடந்த (01.09.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரி

### அமரர் செல்வி மாலினிதேவி முத்துரத்தினம்

அவர்களின் மரணச்செய்தியறிந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும், உள்நாட்டு வெளிநாட்டு உறவினர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அரச வீதி, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

# ராஜஸ்தானின் வெற்றிநடைக்கு முடிவுகட்டியது கொல்கத்தா!





ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தானின் வெற்றிநடைக்கு முடிவுகட்டியது கொல்கத்தா. 37 ஓட்டங்களால் கொல்கத்தா வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு கில் சிறந்த ஆட்டத்தை வழங்கியபோதிலும் நரைன் தடுமாறினார். 15 ஓட்டங்களுடன் நரைன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ரணா, கில் இணைந்து சிறிதுநேரம் நிலைத்தனர். 10 பந்துப்பரிமாற்றங்களில் அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார் ரணா. அவர் 22 ஓட்டங்களைப் பெற்றார். 47 ஓட்டங்களுடன் கில்லின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 14 பந்துகளில் 24 ஓட்டங்களுடன் ரசல் வீழ்ந்தார். மோர்கன் 23 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்து 6 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது கொல்கத்தா.

பந்துவீச்சில் ஆச்சர் 2 இலக்குகளையும் ராஜ்புட், உனத்கட், கரன், திவெட்டியா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி ஆரம்பம் முதல் தடுமாறியது. பட்லர் ஒருமுனையில் நிலைத்தாலும் கடந்த ஆட்டங்களில் அதிரடி காட்டிய சிமித் 3 ஓட்டங்களுடனும் சாம்சன் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். உத்தப்பா 2, பராக் 1 என்று தடுமாற்றம் தொடர்ந்தது. பட்லரும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 42 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்தது ராஜஸ்தான். கடந்த ஆட்டத்தில் 5 சிக்சர்களை விளாசி கவனக்குவிவைப் பெற்ற திவெட்டியா இந்த ஆட்டத்தில் 14 ஓட்டங்களுடன் சுருண்டார். ராஜஸ்தானின் தடுமாற்றம் தொடர்ந்தது. முடிவில் அந்த அணி 9 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



(ம)

## தேவை

உயர்தர **சைவ உணவகம்** ஒன்றிற்கு **மரக்கறி வெட்டுபவர்** பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ வேலை புரிவதற்கு வேலையாள்கள் உடனடியாக தேவை.
(ஆண்,பெண் இருபாலாரும்)

077 711 2269, 021 221 9946

## பெயர் மாற்றம்

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியில் வசித்து வரும் **திருமதி செல்வராசா தங்கமணி** என்னும் எனது பெயரை **திருமதி செல்வராசா தவமணி** என பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.

செல்வராசா தவமணி

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் வளர்ந்து வரும் **ஐஸ்கிறீம்** நிறுவனத்திற்கு **விற்பனை பிரதிநிதி**(Sales Rep) தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

077 104 2257

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்டச் செயலகத்தில் 01.01.2009 ஆந் திகதியிலிருந்து 30.09.2020 ஆந் திகதிவரை பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும். 23.07.2012 ஆந் திகதியிலிருந்து 21.09.2020 ஆந் திகதிவரை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளராகவும் அளப்பரிய சேவையாற்றியதுடன். சமுர்த்தி செயற்பாடுகளில் யாழ். மாவட்டம் தேசிய ரீதியில் முன்னிலை வகிப்பதற்கு அரும்பணியாற்றி நேற்றையதினம் **(30.09.2020) மன்னார் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையேற்ற**

**உயர்திரு. கந்தையா மகேஸ்வரன்** அவர்களை

மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்












Congratulations

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு திறம்படப் பணி செய்தீர்!
ஏழைகள் வறுமை ஒழித்திட துணை நின்றீர்!
நம்மவர் அனைவரையும் உறவெனக் கொண்டீர்!
மேவும் பணியினால் மேன்மை பெற்றுயர்ந்தீர்!
மேதினியில் பொலிவுடன் வாழ்க பல்லாண்டு!

அன்புடன் வாழ்த்தும்,
**உத்தியோகத்தர்கள்**

# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 02.10.2020 – 15.10.2020 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 16.10.2020 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 16.10.2020 மு.ப 10.30 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 12,084,100.00 | 120,800.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,550,600.00 | 15,500.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 906,600.00 | 9,000.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,308,000.00 | 13,000.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 105,600.00 | 1,000.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 79,000.00 | 800.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 27,400.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 26,100.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 15,100.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 19,700.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 17,600.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 16,500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 105,500.00 | 1,000.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,300.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 185,900.00 | 1,900.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 273,900.00 | 2,700.00 | 750.00 |
| 17 | கைதடிப் பொதுச்சந்தை | 22,600.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 316,600.00 | 3,200.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 72,600.00 | 700.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 44,000.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 32,700.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 11,100.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 34,200.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 02.10.2020 தொடக்கம் 15.10.2020 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.(Vat,NBT நீங்களாக)
4. 16.10.2020 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **“தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்”** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை **“பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்”** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 01.10.2020


# அல்விஸுக்குப் பிணை

கொழும்பு, ஒக்.1

நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செய்தி பிரசுரித்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இணைய ஊடகவியலாளர் டெஸ்மன் சதுரங்க டி அல்விஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் மொஹமட் மிஹாரால் இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா ரொக்க பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகள் ஆகியன அடிப்படையிலும் செல்ல அனுமதித்த நீதிவான் ஒவ்வொரு வாரத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அவ்வாறு முறைப்பாடு முன்வைக்கப்பட்டால் பிணை ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவீர் எனவும் நீதிவான் சந்தேகநபரை எச்சரித்தார்.

பின்னர் மனு விசாரணையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிவான் அன்று விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார். (எ-இ)


## காணி தேவை

யாழ்ப்பாணம், பலாலி, திருநெல்வேலி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் பிரதான வீதிகளை முன்னிறுத்தி **மூன்று பரப்புக் காணி** தேவை.

**077 143 9383**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி சிவநயனி சர்வேஸ்வரா** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி திவ்யபவானி சிவமோகன்**

அவர்கள் நேற்று (30.09.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
18
.
11
.
1946



மறைவு
30
.
09
.
2020

**குணரட்ணம் அகிலாண்டேஸ்வரி**

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா மில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் அகிலாண்டேஸ்வரி நேற்று (30.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும், கணேசானந்தன், கயேந்திரன் (டென்மார்க் - வைத்தியர்), ஜெயந்திரன் (வியாபாரம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற யோகேந்திரன் , வியேந்திரன் (வவுனியா டயர் கடை உரிமையாளர்), குருபரன் தாரணி (யாழ்ப்பாணம் டயர் கடை உரிமையாளர்), மகிபன் அம்பிகா (வவுனியா பொது வைத்தியசாலை - வைத்தியர்) ஆகியோரின் தாயும், கணேசானந்தன் (AIA இன்சூரன்ஸ், Regional Manager), குருபரன் ( KT 3D Wheel Alignment வவுனியா), மகிபன் (Enginieer), கலாதேவி (டென்மார்க் - வைத்தியர்), சோபனா ஆகியோரின் மாமியும், டிலுக்சிகா, ரிசோபன், ரிஷிக்கா, காலஞ்சென்ற லதுர்ஜன் மற்றும் தக்சினா, நர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமை வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் பூந்தோட்ட மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**076 229 7795**

# வாள்வெட்டுச் சம்பவத்தில் தேடப்பட்டவர் யாழ்.நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக சரண்

யாழ்ப்பாணம், ஒக். 1

தனுரொக் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார் என்று கூறப்படும் ஆவா குழுவின் வினோதன் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்றுச் சரணடைந்தார். அவரை எதிர்வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியில் கடந்த சனிக்கிழமை மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. கார் ஒன்றில் வந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்த சிலர் மோட்டார் சைக்கிளில் சென்ற தனுரொக் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் படுகாயமடைந்த தனுரொக், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணை முன்னெடுத்தனர்.

தனுரொக் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் கொக்குவிலைச் சேர்ந்த மோகன் அசோக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார். மேலும் மூவர் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

காரின் உரிமையாளரை அழைத்து வாக்குமூலம் பெற்ற பொலிஸார், அவரை விடுவித்திருந்தனர்.

கொலை முயற்சி சந்தேக நபர்கள் நால்வரையும் வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில், தேடப்பட்டவரான வினோதன் சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் சரணடைந்தார். அவரையும் வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (த26)

## தொடர்ச்சிகள்......

### போராட்ட ......

'தமிழர்கள் அறவழியில் போராடியோ அல்லது மீண்டும் ஆயுதம் தூக்கிப் போராடியோ அரசை ஒருபோதும் மிரட்ட முடியாது. அரசு நடுநிலையுடன் செயற்படுகின்றது. இதைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் கூறிவைக்க விரும்புகின்றோம்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

'வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் உறவுகளை அடக்கியாள முடியும் என்று ராஜபக்ச அரசு இனியும் எண்ணவே கூடாது. கடந்த 26ஆம் திகதியும், 28ஆம் திகதியும் இங்கு நடைபெற்ற அரசுக்கு எதிரான அறவழிப் போராட்டங்களின் வெற்றிச் செய்திகள் இதற்கு உதாரணங்களாக உள்ளன' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிங்களவர்களைப் போல் தமிழர்களும் சகல உரிமைகளையும் இந்த நாட்டில் அனுபவிக்கின்றார்கள். அவர்கள் தற்போது பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூரவே அனுமதி கேட்டு உணவொறுப்புப் போராட்டத்தையும், முழு அடைப்புப் போராட்டத்தையும் நடத்தியுள்ளார்கள். தமிழ்க் கட்சிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே தமிழர்கள் இந்த ஒரு நாள் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இதனால் எந்தப் பயனையும் தமிழர்களும், தமிழ்க் கட்சியினரும் பெறமாட்டார்கள்.

இந்த ஏமாற்றுப் போராட்டங்கள் வெற்றியடைந்துள்ளன என்று தமிழ்த் தலைவர்கள் கனவு காண்கின்றார்கள். ஒரு நாள் போராட்டங்கள் வெற்றியடைந்தன எனின், சுமார் 70 வருடங்களாக தமிழர்கள் ஏன் அறவழியிலும், ஆயுதம் தூக்கியும் போராடினார்கள். தமிழ்த் தலைவர்களின் இந்த ஏமாற்று வேலைகளுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இனியும் துணை போகக்கூடாது' என்றார்.

(ம-22)

### மூவினத்தவர்களும் ......

றவுள்ள இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் மூவின மக்களும் பங்கேற்க வேண்டும்' இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடளாவிய ரீதியில் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக இடம்பெறும் போராட்டங்களில் ராஜபக்ச அரசுக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், சிவில் அமைப்புகளும் கலந்துகொள்ளவுள்ளன.

இந்தப் போராட்டங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவின மக்களும் கட்சி பேதமின்றி அணிதிரள வேண்டும். நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் சகல தரப்புகளும் இந்தப் போராட்டங்களில் பங்கேற்க வேண்டும். மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற அதிகாரத் திமிருடன் இந்த அரசு செயற்படுகின்றது. இதற்கு நாட்டு மக்கள்தான் வீதியில் இறங்கி முடிவுகட்ட வேண்டும்' என்றார். (ம-22)

### துண்டித்த கையை ......

யான பங்களிப்பை வழங்கினர் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கை துண்டாடப்பட்டவருக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மேற்கொண்டவிதம் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே மருத்துவர் த.சத்தியமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் கை துண்டாடப்பட்ட நிலையில் கடந்த 23ஆம் திகதி அதிகாலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை வல்லுநர் இளஞ்செழியன் பல்லவன் தலைமையிலான மருத்துவக்குழுவினர் 12 மணித்தியாலங்கள் தொடர் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டனர்.

இந்த அறுவைச் சிகிச்சை வெற்றியளித்ததன் காரணமாக குறித்த நபரின் கை நல்ல நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சில மாதங்களின் பின்னர் அவரது கை பழைய நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் கைகள், கால் துண்டாகுதல் தொடர்பாக விழிப்புணர்வு அடையவேண்டும். வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றாலும் இவ்வாறான சிகிச்சைகள் வழங்கமுடியாது போகக்கூடும். இது பல சிக்கலான சிகிச்சை முறை என்பதை பொதுமக்கள் அறிய வேண்டும் - என்றார். (ஓ.5,26)

### இலங்கையில் ......

பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பிறர் மீதான இலங்கையின் கண்காணிப்பு நடவடிக்கைகள் கவலை தருகின்றன. இலங்கையில் இருந்து கடந்த 2018ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காகச் சென்றவர்கள், தமது பயணத்துக்கு முன்னரும் அதற்குப் பின்பும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இவ்வாண்டு நடைபெறும் மனித உரிமை கூட்டத்தொடரின் கிளைக் கூட்டங்களின்போது இலங்கை மற்றும் ஜெனீவாவை தளமாகக்கொண்டு இயங்கும் பல அமைப்புகள் இவ்வாறான சவால்கள் குறித்து முறைப்பாடுகளை முன்வைத்துள்ளன.

2019ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் உதவிச் செயலாளர் நாயகம் இலங்கையில் நிலவும் அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கல் முறைமை தொடர்பாக எழுத்து மூல அறிக்கையை இலங்கை அரசுக்கு வழங்கி, இவ்வாறான அத்துமீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இவற்றுக்கு இலங்கை அரசு உடனடியாக பதில் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது.

(ம-இ)

### ஒக்ரோபர் ......

ளும் எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. அத்துடன், க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம-இ)

### பெண்ணொருவர் .....

2010ஆம் ஆண்டு நிலாவெளி கடற்கரைப் பகுதியில் உள்ள வீட்டில் நிலாவெளி இறக்கண்டியைச் சேர்ந்த சாஜகான் என்ற நபரால் 53 வயது நிரம்பிய பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த வழக்குத் தொடர்பான விசாரணை திருகோணமலை மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. சந்தேகநபர் மீதான குற்றம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் ஐந்து லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தவறின் மேலும் 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் தீர்ப்பிடப்பட்டது. (ம-இ)

### கொரோனா .....

அதன் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையிலேயே உள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு எச்சரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முகக்கவசம் பயன்படுத்துவதைச் சிலர் புறக்கணித்துவிட்டனர். எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் சமூகத்திலிருந்து கண்டறியப்படமாட்டார்கள் என்று அதிகாரிகளால் உத்தரவாதம் அளிக்க முடியாது. மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் தற்போதும் உள்ளனர். எனவே சிறிதளவு தவறும் கோரோனா வைரஸ் பரவுவதற்கு வழிவகுக்கும். நாடு ஆபத்தில் இல்லை என்று அதிகாரிகள் உறுதியளிக்கமாட்டார்கள்.

இந்தியாவில் கோரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடல் வழியாக யாராவது சட்டபூர்வமாக அல்லது சட்டவிரோதமாக நாட்டிற்குள் நுழைந்தால் தொற்று ஏற்பட நேரிடலாம்.

கோவிட் - 19 நோய்க்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு, இலங்கை மக்களுக்கு சிகிச்சையளிக்க கிடைக்கும் வரை, கோரோனா வைரஸ் பரவல் நாட்டில் அச்சுறுத்தலாகவே இருக்கும். எனவே பொதுமக்கள் சமூகத் தொடர்புகளை முடிந்தவரை குறைக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் தங்கள் நடமாட்டங்களைக் குறைக்க வேண்டும். முடிந்தால், தனிநபர்கள் தங்கள் அன்றாடப் பணிகளை ஒரு வெளிப் பயணத்தில் முடிக்க வேண்டும். கோரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் குறைக்க முகக் கவசம் அவசியமாகும். எனினும் கடந்த சில வாரங்களாக முகக்கவசம் அணிவதற்கான ஆர்வம் பொதுமக்கள் மத்தியில் குறைந்து விட்டது - என்றார். (ம-இ)





# ஆர்மேனியா–அசர்பைஜான் மோதல்: பொதுமக்கள் உட்பட 100 பேர் சாவு

**சர்ச்சைக்குரிய நகோர்னோ– கரபக் பிராந்தியப் பிரச்சினையில் ஆர்மேனியா மற்றும் அசர்பைஜான் நாட்டுப் படைகளுக்கு இடையே நீடிக்கும் உக்கிர மோதல்களில் பொதுமக்கள் உட்பட சுமார் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

இந்த மலைப்பிராந்தியம் அசர்பைஜானின் அங்கமாக அங்கீகரிக்கப்பட்டபோதும், 1994 இல் போர் முடிந்தது தொடக்கம் ஆர்மேனியர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நீடிக்கும் மோதல்களில் 84 இராணுவத்தினரும் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது இராணுவத்தின் இழப்புப் பற்றி அசர்பைஜான் தகவல் வெளியிடாதபோதும் தமது தரப்பில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அது உறுதி செய்துள்ளது.

நான்கு நாட்களுக்கு முன் ஆரம்பமான மோதல் தற்போது நகோர்னோ-கரபக் பிராந்தியத்துக்கு வெளியிலும் பரவியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பிராந்தியத்தில் இடம்பெறும் தீவிர மோதலாக இது மாறியுள்ளது. இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த ஐ.நா பாதுகாப்புச் சபை நேற்று அவசரமாகக் கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## பாபர் மசூதி வழக்கு; குற்றஞ்சாட்டப்பட்ட பா.ஜ.கவினர் விடுதலை

புதுடில்லி, ஒக்.1

இந்தியாவில் அயோத்தி பாபர் மசூதி 1992 இல் இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு

சிறப்பு நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது. பாபர் மசூதி இடிப்பு முன்னரே திட்டமிடப்படவில்லை என்றும், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தீர்ப்பின்படி குற்றச்சாட்டப்பட்ட 48 பேரில் உயிருடன் இருக்கும் 32 பேரும் விடுதலை செய்யப்படுகின்றனர். அவர்களில் இந்திய முன்னாள் துணை பிரதமர் எல்.கே.அத்வானி, உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் மற்றும் பிற பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள் முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, வினய் கட்டியார் மற்றும் சாக்ஷி மகாராஜ் மற்றும் பலர் விடுதலையாகியுள்ளனர். பாபர் மசூதி 1992 டிசம்பர் 6 அன்று இடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 28 ஆண்டுகள் ஆகின்றன. அயோத்தி பாபர் மசூதியை மையமாகக் கொண்டு இரண்டு வழக்குகள் இருந்தன. ஒன்று சர்ச்சைக்குரிய நிலம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான 'சிவில்' வழக்கு. இன்னொன்று மசூதியை இடிப்புக்கு காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீதான 'குற்றவியல்' வழக்கு. சிவில் வழக்கில் ஏற்கனவே இந்துக்கள் தரப்புக்கு சாதகமான தீர்ப்பு வந்து அங்கு இராமர் கோயில் கட்டுவதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் மசூதி இடிப்புத் தொடர்பான வழக்கில் நீதிமன்றம் நேற்று இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. (வ-இ)

## இந்தோனேசிய நிலச்சரிவில் சிக்கி குழந்தைகள் உட்பட 11 பேர் சாவு

ஜகார்த்தா, ஒக்.1

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 10 மாத இரட்டைக் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தோனேசிய அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர். கனத்த மழையும் பலத்த காற்றும் வீசியதைத் தொடர்ந்து, தரகான் வட்டாரத்தின் சில பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. அதில் சில வீடுகள் புதையுண்டன. 19 வீடுகள் சேதமடைந்தன. உயிரிழந்த 11 பேரில் ஐவர் குழந்தைகளாகும். மேலும் நால்வர் உயிரோடு மீட்கப்பட்டனர். இந்தோனேசியாவில் சுமார் 125 மில்லியன் மக்கள் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை இந்தோனேசிய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதியாக உள்ளது என அந்நாட்டின் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கணிப்பிட்டுள்ளது. (வ-இ)



## உயிரிழந்த யானைகளின் மூளையை அமெரிக்காவுக்கு அனுப்பத் திட்டம்

காபோரோன், ஒக்.1

போட்ஸ்வானாவில் இறந்த யானைகளின் மூளையின் ஒரு பகுதியை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு சிம்பாவே திட்டமிட்டுள்ளது. யானைகளின் உயிரிழப்புக்கு காரணமான நச்சு நுண்ணுயிரிகளை பரிசோதனை செய்யவே இந் நடவடிக்கை எடுக்கபடவுள்ளது.

சிம்பாவேயின் மேற்குப் பகுதியில் ஓகஸ்ட் 24 முதல் இதுவரை 34 யானைகள் உயிரிழந்துள்ளன என அந் நாட்டின் நாடாளுமன்றத்திடம் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. போட்ஸ்வானாவில் 330 யானைகளின் உயிரிழப்புக்கு சயனோ என்ற பக்டீரியாக்கள் உற்பத்தி செய்த நச்சுப்பொருள் கலந்த தண்ணீரைப் பருகியமையே காரணம் எனத் தெரியவந்துள்ளது. காலநிலை மாற்றம் உலகளாவிய வெப்பநிலையை அதிகரிப்பதால் இவ்வாறான நச்சுத்தாக்கங்கள் அடிக்கடி நிகழ்வதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் டி.என்.ஏ பகுப்பாய்விற்காக இறந்த யானைகளின் மூளைப் பாகங்களை அமெரிக்காவுக்கு அனுப்ப சிம்பாவே திட்டமிட்டுள்ளது. (வ-இ)

## ஆப்கான் குண்டு வெடிப்பில் 14 பொதுமக்கள் உயிரிழப்பு

காபூல், ஒக்.1

மத்திய ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதியோர குண்டு வெடிப்பு ஒன்றில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 14 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

டாய்குடி மாகாணத்தில் வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் ஏழு பெண்கள், ஐந்து சிறுவர்கள் மற்றும் இரு ஆண்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனை அந்நாட்டு உள்துறை அமைச்சின் பேச்சாளர் தாரிக் ஆரியன் தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் இரு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-இ)



## ட்ரம்ப் – ஜோ பைடன் நேருக்கு நேர் மோதல்

வொஷிங்டன், ஒக்.1

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் பிரதான இரு வேட்பாளர்களான ட்ரம்ப் மற்றும் ஜோ பைடனுக்கு இடையிலான முதலாவது நேரடி விவாத நிகழ்ச்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந் நேரடி விவாதத்தில் கொரோனாத் தொற்று பரவல், உச்சநீதிமன்றத்தின் வெற்றிடங்களை நிரப்புதல், கறுப்பு இனத்தவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதி, மற்றும் சுகாதார கட்டமைப்பு தொடர்பில் இருவரும் தர்க்கம் புரிந்துள்ளனர். நிகழ்ச்சியின் போது ஜனாதிபதி ட்ரம்ப், ஜோ பைடனுக்கு கருத்துக்களை தெரிவிக்க தொடர்ச்சியாக தடை ஏற்படுத்தியதுடன் இந் நிகழ்ச்சியின் அறிவிப்பாளர் இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. (வ-இ)

# ஆவரங்கால் அணி கரப்பந்தில் மகுடம்



மின்னலடி ஜாக்கி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ஏ. பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவினருக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மின்னலடி ஜாக்கி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து, புத்தூர் கலைமதி அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட தொடரில் ஆவரங்கால் மத்திய அணி 25:18, 25:20, 25:19 என்ற கணக்கில் 3:0 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை கரப்பந்தாட்ட சங்க நிர்வாக உறுப்பினரும், வடமாகாண கரப்பந்தாட்ட ஒருங்கிணைப்பாளருமான கி. மனோகரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஏ.ஏ.சி. சுமணசேகர, கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.சிவபாலன், யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க உப தலைவரும், சர்வதேச கரப்பந்தாட்ட சங்கமத்தியஸ்தருமான ந.சுதேஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-422)


## கட்டடம் வாடகைக்கு

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள் Super Market போன்றன நடத்துவதற்குரிய வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய கட்டடம் வாடகைக்குண்டு.

பாலாலி வீதி, கோண்டாவில் சந்தி
(ராஜா பிளாசாவுக்கு முன்பாக)
077 459 8499

## Techno World
தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்ப பிரிவு 2022

பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்

## புதிய பிரிவு ஆரம்பம்

10.10.2020 காலை 08.00 மணிக்கு

(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா

கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21

- ஆராய்ச்சி நிலையம்,
- பண்ணை (New Zealand Farm),
- Tissue Cultura Lab,
- Automobile lab பார்வையிடப்படும்.

தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549


## ஜோகோவிச், பிளிஸ்கோவா முதல் சுற்றில் வெற்றி





பாரிஸ், ஒக்.1

பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டியில் ஜோகோவிச், பிளிஸ்கோவா முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடந்து வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் 8 ஆம் நிலை வீரர் பெரேட்டினி (இத்தாலி) 6:3, 6:1, 6:3 என்ற நேர் செற்றில் வாசெக் போஸ்பிசிலை (கனடா) தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 6:0, 6:2, 6:3 என்ற நேர் செற்றில் மிகைல் மிர்ரையை (சுவீடன்) வீழ்த்தி எளிதில் வெற்றி பெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின், தரவரிசையில் 4 ஆவது இடம் வகிக்கும் கரோலினா பிளிஸ்கோவா (செக்குடியரசு) முதல் தடையைக் கடப்பதற்கு 2 மணி 15 நிமிடங்கள் போராட வேண்டியிருந்தது. அவர், தகுதிச் சுற்று மூலம் பிரதான சுற்றை எட்டிய மயார் ஷெரிப்பை (எகிப்து) 6:7 (9:11), 6:2, 6:4 என்ற செற் கணக்கில் தோற்கடித்தார். (ற)


## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 05 . 1934
இறப்பு 29 . 09 . 2020

### தியாகராசா நீலாம்பிகை

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா நீலாம்பிகை நேற்றுமுன்தினம் (29.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், நவமணிதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கமலாதேவி, சற்குணராஜா, தேவயோகேஸ்வரி(சித்திரா), சத்தியதேவி(சந்திரா), அம்பிகாவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் உலகநாதன், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் குகநேசன், சிவபாலன், கோணேசலிங்கம், வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகந்தன், சுகன்யா, கௌசிகன், சிந்துஜா, பவித்திரன், கஜந்துகன், கஜந்துகா, நீரா, கௌதன், கபிஷன், டினேஷன், ஜனகன், பிரபு, தாட்சாயினி, மதுஷன், மதுஷா,மைக்கேல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சாய்அபினேஷ், ஷரீஷ், நதாஷா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2020) வியாழக்கிழமைமுற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல:-27,கருவேலடி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 829 0351


## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.1

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் "யாழின்நாயகன்" கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சென் லூட்ஸ் அணியை எதிர்த்து சென்ஸ்ரார் அணியும், 4 மணிக்கு காளியம்பாள் அணியை எதிர்த்து சென் தோமஸ் ஐக்கியம் அணியும், 5 மணிக்கு அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. (ற-422)

## இறுதிப் போட்டிக்குள் முல்லை. ஹொக்கி



முல்லைத்தீவு, ஒக்.1

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் 2020 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண மட்ட ஹொக்கிப் போட்டியில் முதல் தடவையாக இறுதிப் போட்டிக்குள் முல்லைத்தீவு மாவட்ட ஹொக்கி அணி நுழைந்துள்ளது. இந்த இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஹொக்கி அணியை எதிர்த்து, யாழ். மாவட்ட ஹொக்கி அணி மோதவுள்ளது. இதன் அரையிறுதிப் போட்டி, யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியில் நடைபெற்றது. இந்த அரையிறுதிப் போட்டியில், மன்னார் மாவட்ட ஹொக்கி அணியுடன் முல்லைத்தீவு மாவட்ட ஹொக்கி அணி மோதியது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட ஹொக்கி அணியினர் 3.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளனர். (ற-19)


## மரண அறிவித்தல்



### அருட்பணி அல்பிறட் விக்ரர் ஜெயசிங்கம் அமதி

அருட்பணி அல்பிறட் விக்ரர் ஜெயசிங்கம் அமதி அவர்கள் இறைபதமடைந்தார். இவரின் உடல் யாழ்-கொழும்புத்துறை புனித இயூஜின் டி மசெனட் சிற்றாலயத்தில் இன்று (01.10.2020) வியாழக்கிழமை பி.ப 1.30 மணி வரை வைக்கப்படுகிறது. அதன் பின்பு மாலை 3.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்-புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்பணி எட்வின் வசந்தராஜா அமதி
மாகாண முதல்வர்- அமல மரித்தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.